தென்றல்

விலை 16 புதிய காசுகள்

~ ஆசிரியர்: கண்ணதாசன் ~

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்', சென்னை - 6.

மலர் 5 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1990, மாசி 30 (14-3-'59). சனிக்கிழமை | இதழ் 39

நாமார்க்கும் குடியல்லோம்!

"'ஒருவனால் கோடி மக்கள்
உயர்ந்தனர்' என்றால் அந்த
ஒருவனே நீதான் உன்னால்
உயர்ந்தவர் தாழ்த்தப்
பட்டோர்
'செறுமினால் குற்றம்; எம்மைத்
தீண்டினால் குற்றம்' என்றே
குறுமதி வீணர் சொன்ன
குலத்திடை விளக்கம்
தந்தாய்!"

என்று டாக்டர் அம்பேத்காரைப் பற்றிப் பாடிட்ட பாடல் அமெரிக்க நீக்ரோக்களின் மாபெரும் தலைவர் டாக்டர் **மார்ட்டின் லூதர் கிங்** அவர்களுக்கு மிகவும் பொருந்தும். ஆமையாய், ஊமையாய்க் கிடந்த அமெரிக்க நீக்ரோக்களை வீரராய் விவேகிகளாய் ஆக்கிய பெருமை டாக்டர் லூதருக்கு உண்டு. "நீ கறுப்பனாக பிறந்துவிட்டாய், யாம் வெள்ளையர்களாகப் பிறந்துவிட்டோம். ஆகவே பிறப்பிலே நீ தாழ்ந்தவன். ஏது உனக்கு உரிமை?" என எக்காளமிட்டனர் வெள்ளையர்கன். உணவுச் சாலைகளிலே, பள்ளிகளிலே, நடன அரங்கங்களிலே எங்கும் நீக்ரோ இனத்தவரை அனுமதிக்க மறுத்தனர் நிறபேத வெறியர்கள். "மனிதர்கள் எல்லோரும் சமம். திறமையின் வளர்ச்சி, அல்லது சுடர்விடும் அறிவு சூழ்நிலையின் தன்மையைப் பொருத்தது என்று கூறுகிறாயே உனக்கு உண்டோ எம் ஆற்றல்? எம் அறிவு? எம் திறமை?" எனக் கேட்டனர்வெள்ளையர்கள். உரிமை கேட்ட நீக்ரோ இனத்தவர் வெள்ளையரின் வெறித் தாக்குதல்களுக்கு ஆளாயினர். வெள்ளையர்களின் வெறிச் செயலைக் கண்டு விண்ணும் மண்ணும் அதிர்ந்தது. பச்சிளம் பாலகர்கள், தாய்மார்கள், வயோதிகர்கள், வாலிபர்கள் அத்தனை பேரும் அடிமைகளாக நடத்தப்பட்டனர். கருவில் இருக்கும் வெள்ளை மாதுவின் சிசுவிற்கும் நிறபேதம் கற்பிக்கப்பட்டது. ஏன் என்று கேட்க,எதிர்த்து பேசயாரும் இல்லை. உரிமை கேட்டால் பலாத்காரத்தை உபயோகித்து அந்த நீக்ரோ இனத்தவரை உபத்திரவப் படுத்தினர். "வெள்ளையர்களுக்கு உள்ள வாய்ப்பும் வசதியும் உரிமையும் சமமாக நீக்ரோ இனத்தவர்களுக்குக் கொடுக்கப்பட்டால் வெள்ளை மனிதன் உயிரோடு வாழவேமுடியாது" என்று கூறினார் **குந்தர்**. தங்களது ஆற்றலையும் அறிவையும் திறமையையும் உலகுக்கு அறிவிக்கும் சந்தர்ப்பத்தை எதிர் நோக்கியிருந்தனர், நீக்ரோ இனத்தவர். துன்பமும் தொல்லைகளும் பின்தொடர, ஏசலும் இகழ்ச்சியும் கொத்த, வாழ்க்கைப் பயணத்தை தொடர்ந்துகொண்டிருந்த அந்தக் கறுப்பர்களின் மத்தியில் தோன்றினார் செயல் வீரர் மார்ட்டின் லூதர்கிங். தூங்கிக் கிடந்த அந்த சமுதாயம் தோள் தட்டிக் கிளம்பியதற்கு மார்ட்டின் லூதர் அவர்களின் தன்னகரில்லா ஆற்றலும் அறிவுமே காரணம். யார் இந்த மார்ட்டின் லூதர் கிங்? அடிமைப்பட்டுக் கிடந்த மக்களை இரட்சிப்பதற்காக ஆண்டவனால் அனுப்பப்பட்டானுமே மோசஸ்- அவனா இவன்? அல்லது இன்னல் பட்டோரை எழுச்சியுறச் செய்வதற்கு "ஆண்டவன் எடுத்த அவதாரமா?" இல்லை! இல்லை! சாதாரண மனிதன்தான்.

மைக்கேல் லூதர் கிங் என்ற பாதிரியாருக்கு 1927-ம் ஆண்டு மகனாகப் பிறந்தவர் மார்ட்டின் லூதர் கிங். இளமையிலே சக மாணவர்கள் பொருமைப்படும் அளவிற்குக் கல்வி கற்று **1951-ம் ஆண்டு பிஎச். டி.** (Ph. D.) பட்டத்தை **பாஸ்டன்** சர்வ கலா சாலையிலும் **ஹார்வர்டு** சர்வ கலா சாலையிலும் பெற்றார். கல்லூரியில் படிக்கும்பொழுதே தான் கறுப்பன் என்பதற்காகக் தனக்குக் கிடைக்கும் அவமதிப்பையும் தூற்றலையும் கண்டு கொதித்து எழுந்தது அவர் மனம். சமுதாயத்தில் நீக்ரோக்களின் நிலையை உயர்த்தப் பாடுபட வேண்டும் என எண்ணினார் லூதர். செயல் முறையில் ஈடுபடத் துவங்கினார். கல்லூரிப் படிப்பை விட்டு வெளிவந்தவுடன் அதாவது 1951-ம் ஆண்டு சமூக, அரசியல் செயற்குழு (Social and Political Action Committee) என்ற ஒரு அமைப்பை ஏற்படுத்தி நீக்ரோக்களுக்குப் பாடுபடத் துவங்கினார். இன உணர்வு, சுயமரியாதை, உரிமை வேட்கை முதலியன நீக்ரோக்கள் மத்தியில் புயலென வீசிற்று. இந்தச் சமயத்தில் **மான்ட் கோமரியில்** நடந்த ஒரு சம்பவம் வெள்ளையரின் நிறவெறியை உலகுக்கே பறை சாற்றிற்று.

1955-ம் ஆண்டு டிசம்பர் மாதம் ஒரு நாள் ஒரு நீக்ரோ மாது கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டாள். பஸ்ஸில் நின்றுகொண்டு பிரயாணம் செய்த ஒரு வெள்ளைக்காரனுக்கு அப்பொழுது உட்கார்ந்து பிரயாணம் செய்த அந்த நீக்ரோ மாது தான் எழுந்து தன் இடத்தைக் கொடுக்கவில்லை என்பதுதான் அவள்மீது உள்ள குற்றச்சாட்டு. சட்டத்தை மீறினார் அந்த நீக்ரோ மாது என வாதிட்டு சிறைச்சாலையிலே தள்ளினார்கள். "இது ஒரு குற்றமா?" என உலகமே அதிசயித்தது. "உரிமை கேட்டால் சிறைச்சாலையா?" என உள்ளம் உருகினார் மார்டின் லூதர்கிங். வெள்ளையரை எதிர்த்துப் போராட வீறுகொண்டு கிளம்பினார். பலாத்காரத்தைவிட அன்பும் அகிம்சையுமே சிறந்த சாதனங்கள் என்றுணர்ந்து புறப்பட்டார் கிங். "ஒருவன் உன் ஒரு கன்னத்தில் அடித்தால் உன் மறுகன்னத்தையும் காண்பி!" என்று ஏசுநாதரின் வாழ்க்கை, "அன்பே தெய்வம்; அகிம்சையின்மூலமே எதிரியை வெல்லலாம்" என்ற தத்துவம் முதலியவைகளால் பெரிதும் கவரப்பட்ட டாக்டர் கிங் 'இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்துவிடல்' என்ற வள்ளுவரின் பொன்மொழியையும் 'கடமை - கட்டுப்பாடு - கண்ணியம்' என்ற அண்ணாவின் அறிவுரையையும் ஆயுதங்களாகக் கொண்டு அமெரிக்க நிறவெறியர்களுடன் போராட ஆரம்பித்தார். பலாத்காரத்தின்மூலம் எதையும் சாதிக்க முடியாது. அன்பின் மூலம்தான் எதிரிகளை வெல்லமுடியும் என்பதில் அழியாத நம்பிக்கை கொண்டவர் டாக்டர் கிங். பலாத்காரச் செயல்கள் எதிலும் ஈடுபடக் கூடாது எனத் தனது தோழர்களுக்குஆணையிட்டார். அற முறையில் போராட்டத்தை ஆரம்பித்தார். நீக்ரோக்கள் டாக்டர் கிங் தலைமையில் கூடி இனித் தாங்கள் பஸ்ஸில் போகக்கூடாது என சபதம் செய்தனர். எல்லோரும் காலினால் நடந்தே தங்கள் தங்கள் அலுவலகத்திற்குச் சென்றனர். பஸ்ஸில் ஒருவரும் ஏறவில்லை. ஆயிரக்கணக்கான நீக்ரோக்கள் முதன் முறையாகத் தங்கள் தங்கள் இருப்பிடத்திற்கு நடந்தே சென்றனர். வெள்ளை பஸ் முதலாளிகளின் வருமானம் குறைந்தது. கம்பெனியை மூடும் அளவிற்கு வருமானம் வந்துகொண்டிருந்தது. கோபம் கொண்டனர் வெள்ளை முதலாளிகள். என்றாவது ஒருநாள் இந்த நீக்ரோக்கள் தங்கள் பஸ்களில் செல்ல வேண்டி வரும் என எண்ணினர் பஸ் முதலாளிகள். ஆனால் நீக்ரோத்

— 8-ம் பக்கம் —

அடங்கிடோம்; அடிமையாய் நசுங்கிடோம்!

கருகிய மலர்கள்!

"இப்பொழுது என்ன செய்து கொண்டிருக்கிருய் நாகா? முன்பு ஏதோ ஒரு கம்பெனியிலே வேலை செய்துக் கிட்டிருந்தாயே. அதை விட்டுவிட்டாயா?" என்று கேட்டேன் நான், என் நண்பன் நாகனை நோக்கி.

"அந்தக் கம்பெனியிலேயிருந்து விலகிவிட்டேன். குறைவான சம்பளம் கொடுத்தான். அது நமக்கு கட்டுபடியாகுமா? இப்பொழுது சொந்தமாக வியாபாரம் செய்கிறேன்." என்று கூறினன் நாகன்.

அந்த வேலையை விட்டுவிட்டாயா? நல்ல வேலை செய்தாய். இந்தக் காலத்தில் என்னப்பா, சாதாரண குமாஸ்தா வேலைக்குகூட பி. ஏ., எம். ஏ.-க்கள் போட்டி போட்டுக்கொண்டு வருகின்றனர் வேலை செய்ய. அதனுல் வேலையின் தரமே குறைந்துவிடுகிறது. ஆனல் நீ நல்ல வேளையாக அந்தக் குமாஸ்தா தொழிலை விட்டொழித்துவிட்டு வியாபாரத்தில் புகுந்தாய். இல்லையேல் மாதமொன்றுக்கு ஒரு குறிப்பிட்ட அளவு பணம்தான் சம்பளமாகப் பெற்றுக்கொண்டிருந்திருக்க வேண்டும். இப்பொழுது பரவாயில்லை" என்றேன் நான்.

"அது சரி தோழா. நீ பிஎச். டி. பட்டத்திற்காக ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தாயே? என்னவாயிற்று அது? தேறிப் பட்டம் கிடைத்து விட்டதா?"

"இல்லை இன்னும் கிடைக்கவில்லை. ஆராய்ச்சி செய்து 'தீசிஸ்' அனுப்பியிருக்கிறேன். அது வரவேண்டும். அதைப் படித்து ஆராய்ந்த பிறகு தான் பட்டம் கொடுப்பார்கள். எனக்கு நம்பிக்கையிருக்கிறது. நல்ல முறையிலே ஆராய்ச்சி செய்து 'தீசிஸ்' அனுப்பியிருக்கிறேன். எனக்கு உதவி புரிந்த பேராசிரியரே என் ஆராய்ச்சித் திறனை மிகவும் புகழ்ந்து பேசினர். பட்டம் கிடைத்துவிடும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது."

"பட்டம் கிடைத்ததும் மேலே என்ன செய்வாய்?"

"இன்னும் வேறு துறைகளிலும் கவனம் செலுத்தி படிப்பேன். என் வாழ்நாள் முழுதும் படிப்பதும் எழுதுவதுமாக இருக்கவேண்டுமென்பது என் விருப்பம்."

"உனக்கென்னப்பா. குறைவு. சாப்பாட்டைப்பற்றி நீ ஏன் கவலைப்படப் போகிருய். போதிய சொத்து இருக்கிறது. எழுத்துத் திறமையும் உள்ளது. அழகும் இருக்கிறது. அறிவும் உள்ளது. "எம். ஏ., பி. காம்" பட்டமும் பெற்றுவிட்டாய். இப்பொழுது பொருளாதாரத்தில் 'டாக்டர்' பட்டம் பெறப் போகிருய். வாழ்நாள் முழுதும் படித்துக்கொண்டும், பாங்குடன் எழுதிக்கொண்டும் இருக்கலாம். என்ன சொல்கிருய் தோழா?" என்று குறும்புடன் கேட்டான் நாகன்.

"நீ சும்மா அளக்காதே. நான்தான் அதிசயமாகப் படித்துவிட்டேனு? நான்தான் அற்புதமாக, அழகாக இருக்கிறேனு? என்னைவிட அழகானவர்கள், படித்தவர்கள், அறிவில் மேம்பட்டவர்கள் ஏராளமாக உள்ளனர். ஏதோ படித்தேன், படித்துக் கொண்டிருக்கிறேன். அதைப் போய் அப்படி பிரமாதப்படுத்துகிருயே" என்றேன் நான்.

இருவரும் நெடு நேரம் இப்படியே பேசிக்கொண்டிருந்தோம்.

நானும், என் நண்பன் நாகனும் ஒன்ருகக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தோம் சென்னையில். பி. காம். படித்துத் தேறிவிட்டு ஏதோ ஒரு கம்பெனியில் பணியாற்றிக் கொண்டிருந்தான் நாகன். நான் மேற்கொண்டு எம். ஏ. படித்து தேறிவிட்டு பிஎச். டி. பட்டத்திற்காக ஆராய்ச்சி செய்துவிட்டு சும்மாயிருந்தேன். நான் படித்துக்கொண்டிருக்கையில்தான் அவனுக்குத் திருமணம் நடந்தது. நான் திருமணம் செய்துகொள்ளவில்லை. அவன் திருமணத்திற்குச் சென்று பார்த்துவிட்டுத் திரும்பிய பின்னர் நான் செல்லவேயில்லை. நான் போகாததற்குக் காரணம் படிப்புதான். படித்துக்கொண்டே யிருப்பேன்.

நண்பன் நாகன் திருச்சியில்தான் வசித்துக்கொண்டிருந்தான். அவன் குடும்பத்தோடு தங்கியிருந்தான். என்னை வரச் சொல்லி கடிதம்எழுதிக் கொண்டேயிருப்பான். நான்போகவேயில்லை.

அவன் மணம் நடந்தபொழுது அதாவது மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் பார்த்ததுதான் பிறகு போகவேயில்லை.

என்னை வரச் சொல்லி வருந்தி எழுதுவான் கடிதம். 'வருகிறேன் வருகிறேன்' என்று மட்டும் எழுதிவிட்டு, போகாமல் பேசாதிருப்பேன். எனக்குப் படிப்புத் தொல்லையும் அதற்குமேல் எழுத்துத் தொல்லையும் அதிகம். அதனுல்தான் 'போகலாம், போகலாம்' என்று தள்ளிப் போட்டுக் கொண்டிருந்தேன்.

இந்த முறை என்மீது மிகவும் கோபித்துக்கொண்டு கடிதம் எழுதியிருந்தான். "நீ வராவிட்டால் நம் உறவே அறுந்துவிடும்!" திட்டமாகவும், தீர்மானமாகவும் எழுதியிருந்தான். நான் என் ஆராய்ச்சியை முடித்துக்கொண்டதால் இம்முறை எப்படியாவது போக வேண்டும் என்று போனேன். நான் வந்ததில் அவனுக்குப் பெருமகிழ்ச்சி. அவன் மனைவி சகோதரி கமலா என்மீது மிகுந்த அன்பு வைத்திருந்தாள். ஒரு சிறு குழந்தைதான் அவர்களுக்கு. ஆண் குழந்தையான அதற்கு என் பெயரே வைத்திருந்தார்கள். இதிலிருந்தே என் நண்பனுக்கு என் மீதிருக்கும் அன்பை அறிந்துக்கொள்ளலாம்.

அன்று மாலை நானும் அவனும் வெளியே சென்றுவிட்டு வந்தோம். இரவு என் மனதில் அமைதியே இல்லாது புரண்டுகொண்டிருந்தேன். உறக்கம் வரவில்லை. உற்சாகம் ஓடிவிட்டது. தூக்கம் எங்கேயோ போய்விட்டது.

அன்று மதியம் நான் கண்ட காட்சிதான் என் மனதில் அமைதியை அழித்துவிட்டது; என் உறக்கம் போன இடம் தெரியவில்லை. என் அமைதி அழித்து, உறக்கத்தை ஓட்டிய அந்தக் காட்சிதான் என்ன?

இருவரும் உணவு உண்டதும் சிறிது நேரம் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தோம். என்னை உறங்கச் சொல்லிவிட்டு அவன் எழுந்து போய் விட்டான். எனக்கு மதியத்தில் படுத்துறங்கி, பழக்கமில்லை. படுத்துப் பார்த்தேன். உறக்கம் வரவில்லை. பேசாமல் எழுந்து சன்னலண்டை நின்றுகொண்டு வெளியே பார்த்தேன். பொழுது போக வேறென்ன செய்வது? புத்தகமும் ஏதுமில்லை படிப்பதற்கு.

சிறிது நின்றிருப்பேன் நான். தெருவில் போவோர் வருவோரைப் பார்த்துக்கொண்டிருந்தேன். அப்படியே எதிர் வீட்டின் மீதும் ஒரு நோட்டம் விட்டேன்.

அந்த வீடு நடுத்தரமான நிலையிலிருந்தது. பெரிய பணக்காரர்களுக்கே உரித்தான பெரிய டாம்பீகமான பங்களாவுமில்லை. ஏழை, எளியதுகள் வாழும் குடிசையைப் போன்றுமில்லை. நடுத்தர நிலையில் ஆனல் நல்ல நிலையில் இருந்தது அந்த வீடு.

அந்த வீட்டின் சன்னல்களைப் பார்த்தேன். நான் நின்றிருந்த சன்னலுக்கு நேர் எதிரே அந்த வீட்டிலும் ஓர் சன்னல் இருந்தது. அந்த சன்னலைப் பார்த்தேன். அந்த அறையில் யாரோ நடமாடுவது மட்டும் தெரிந்தது. உற்றுப் பார்த்தேன் ஒன்றும் தெரியவில்லை.

சிறிது நேரத்திற்குள் ஒரு தலை தெரிந்தது. அது ஒரு பெண்ணின் தலை என்று நன்ருகத் தெரிந்தது. அந்த முகம் சன்னலண்டை வந்தது. தெருவைப் பார்த்தது. பின் என்னைப் பார்த்தது. ஒரு நிமிஷம் என்னையே பார்த்தது. பின் சரலென முகத்தை இழுத்துக்கொண்டது.

எனக்கு ஒரு மாதிரியாக இருந்தது. இத்தகைய அனுபவங்கள் எனக்கு இதுதான் முதல்தடவை. காதல்-அது-இது என்கிருர்களே அவைகளில் நான் அவ்வளவாக - ஏன் முழுக்க முழுக்க அவைகளில் ஈடுபடுவதில்லை. கதைகளில் படித்ததோடு சரி. செயலில் ஏதும் தெரியாது.

அந்த முகத்தைப் பார்த்ததும் என் மனதில் ஒருவகை உணர்ச்சி ஏற்பட்டது. சிலருடைய முகத்தை நாம் எத்துனையோ தடவைகள் கண்டிருப்போம். ஆனுல், அவசியத்திற்கு அவர்கள் முகம் எப்படியிருக்கிறது என்று நினைவுக்குக் கொண்டுவர முயன்ருல் முடியாது. காரணம் அவர்கள் முகம் நம் மனதில் பதியாததுதான். ஆனுல் சிலருடைய முகமோ நாம் ஒருமுறை-அதுவும் ஒரே ஒரு கணம் கண்டிருந்தாலும் நம் மனதில் விண்டுவிடாத அளவு படிந்துவிடுகிறது. அவர்கள் முகத்தை அணு அணுவாக, நம்மால் அடையாளம் சொல்லமுடிகிறது.

அந்த வகையில்தான் அந்த மதிவதன முகமும் என் மனதில் பதிந்துவிட்டது. அந்த முகத்தை நான் கண்டது, ஒரு சில விநாடிகள்தான். ஆனுலும் அந்த அழகு முகம் என் மனதில் ஆழப் பதிந்துவிட்டது.

— 9-ம் பக்கம் —

சீனாவும் யூகோவும்

மார்க்ஸ்!

புதுமை மிகு இரஷ்ய மண்டலத்தைப் படைத்தளித்த பரம பிதா!

லெனின்!

ஊனப்பட்டுக் கிடந்த தொழிலாளரிடை வீரக்கனல் எழுப்பிய ஞானத் தந்தை!

அச்சத்தால் துவைக்கப்பட்டுக் கிடந்தோரை (அரிவாள் சுத்திப் போருக்கு) அணிவகுத்திடச் செய்த புனிதப் படை வீரன்!

ஏங்கல்ஸ்!

எங்கள் குலநாயகம்! அவனின் தங்கக் கருத்தால் செழித்தது தாயகம்!

ஓ அஞ்ஞானிகளே! முதலாளித்துவ இருளுக்கு மண்டியிட்டுக் கிடக்கும் படுபாவிகளே! உங்கள் எல்லோருக்கும் வாழ்வளிக்கும் ஜீவ தீர்த்தம்–இதோ, பெருகி ஓடுகிறது. களை தீர்க்க, கை நிறைய அள்ளிப் பருகுங்கள்! சுரண்டும் முதலாளித்துவக் கும்பலின் முதுகெலும்பை நொறுக்கி அடித்து, இதந் தரும் புது வாழ்வு காண வேண்டுமா? உடனே அள்ளித் தின்னுங்கள், எமது பொதுவுடைமை மாத்திரைகளை! தின்றால் நோய் நிற்காது! உண்டால் உடல் அலுக்காது! உங்களுக்கெல்லாம் இருப்பது இரு காது! இனிமேல் அதுவும் இருக்காது! சந்தேகமிருப்பின் உண்ட மக்களை – இரஷ்ய மக்களைக் கேட்டுப் பாருங்கள்! சுவைத்தவர்க்குத்தான் தெரியும் இந்தக் கம்யூனிசச் சூரணத்தின் பெருமை!

எனவேதான்...அன்பழைப்பு விடுகிறோம்! பாட்டாளி மக்களே, உங்கள் துயர் கண்டு உளம் நொந்து, மனம் வெந்து, நீங்களும் கடைத்தேற இவ்வழியைக் காட்டுகிறோம்; கட்டையுடன் பொதுவுடைமை மாளிகை செல்ல இவ்வழியைக் காட்டுகிறோம்! நம்பினவர்க்கு லெனின் தோழன்; நம்பாதவர்க்குக் கொலைகாரன்!

வாருங்கள்; வந்து பாருங்கள்; பார்த்த பிறகு பரம பிதா மார்க்ஸ் வழி ஏகுங்கள்!"

★

ஜாரின் ஆட்சி சடசடவென விழுந்ததும், புதுமைச் சமுதாயத்தைப் படைத்துவிட்டதாகத் தம்பட்டம் அடித்தனர், மாஸ்கோ வாழ் மறையவர்கள் (மறையவர்கள் என்பதை மறைந்து வாழ்ந்த–வாழும் அண்டர்கிரவுண்ட் பேர்வழிகள் என்று பொருள் கொள்ளற்க).

அடிமையிலே உழன்றுகொண்டிருந்த பல நாட்டினரிடமும் தம் அழகுபுரியின் எழிலைக் கூறி, அறிவுரை விளக்கவுரை, பதவுரை, பொழிப்புரை, அகலவுரை, ஆழவுரை எல்லாம் தந்தனர், கிரம்ளின் மாளிகைப் பாவலர்கள்! வெய்யலில் நடக்கும் வேட்கை உள்ளவனுக்கு, கானலும் நீராய்த்தான் தோன்றும்! இக்கரை மேயும் பசுவுக்கு அக்கரை பசுமையாய்த்தான் தோன்றும். அதுவும் அவனும் அப்படித்தான் நினைப்பர், படும் துயரால். ஆட்சித் திமிருக்கு—கொடுமைக் கோடைக்கு பலியாகிக் கிடந்த மக்களுக்கும் அப்படித்தான் பட்டது, புதிய இரஷ்யாவைப்பற்றிய தாக்கல்கள்.

வல்லான் வகுத்த வாய்க்கால் வழி நீரோடுவது இயல்பு. வாடிக் கிடந்த பல நாடுகளும் இரஷ்யாவின் வழியைக் கண்டு வியந்தன; பின் தொடர்ந்தன. வரண்ட கிணற்றில் விழுந்தவனுக்குக் கை கொடுத்துக் கரையேற்றியவனை, கிணற்றில் விழுந்தவன் நம்பத்தான் செய்வான். "கை கொடுத்தது, கருணை நோக்கோடு அன்று; அங்கிருந்து கிளப்பிக் கொடுமுடிக்கு இட்டுச் சென்று குப்புறத் தள்ளி உடனடியாய் உயிரைப் போக்குவதற்குத்தான் இத்துணை கருணை!" என அவன் உணர்வதில்லை. அதுபோலவே இரஷ்யா அழைப்பு விடுத்ததும் பல நாடுகளும் அதை அழைப்பு என்றே கருதின. உள்ளார்ந்த சர்வாதிகார நோக்கத்தை அறிய அவற்றின் ஏமாளித்தனம் இடம் தரவில்லை.

காலம் கடக்க, கடக்க புதிய புதிய அனுபவங்களால் துவைக்கப்பட்ட நாடுகள் சில சிந்திக்கவும் செய்தன. அணைத்து மகிழ்விக்கின்ற இரஷ்ய ஆண்டகைகளின் கையுள் அடிமை விலங்கு இருப்பதை உணர்ந்தன. முதலைக்கு அஞ்சியவன் கரடி தந்த அடைக்கலத்தை ஏற்றுக்கொண்ட கதையாய், மன்னர்களின்–ஏகாதிபத்தியவாதிகளின் பிடியிலிருந்து விடுதலை பெற்ற தாம் புதுவகை சர்வாதிகாரின் இரும்புக் குகைக்குள் அடைபடும் ஆட்டு மந்தையாவதை உணர்ந்தனர். சிந்தித்தனர்; சீறி எழுந்தனர்.

"இரஷ்யப் பரமண்டல"த்திலிருந்து தப்பி ஓட வழி பார்த்தனர். அங்கேரிய மந்தையும் போலந்து மந்தையும் அடக்கப்பட்டன. யூகோ மந்தை ஏதோ தப்பித்தது. இவ்வாறு சிக்கிய நாடுகளுள் மிகப் பெரிது சீனா. சின்னஞ்சிறு யூகோ தப்பித்துக் கொண்டது! பெரிய, பழைய, மூத்த நாடான சீனாவின் நிலை என்ன? தப்பிக்கமுடியுமா? கண்டுண்ட கைகளை அது உயர்த்தித் தூக்கிப் பிடிக்கமுடியுமா?

சீனாவின் வரலாறு பழைமையானது. கற்பனைக்கெட்டா நெடுங் காலமாக, அறிவியல் வளர்ச்சியும் ஆக்கத் திறனும் கொண்டு விளங்கியதும் அந்நாடே. அச்சுக்கலை, பட்டுத்துணி நெசவு முதலிய பலவற்றையும் உலகிற்கீந்ததும், அந்நாடே. உழவர் சமுதாயம் பெருத்த அந்நாட்டின் குடி மதிப்பு 45 கோடியாம். பலப்பல வம்ச மன்னர்களின் பிடியிலே சிக்கித் தள்ளாடியது; சன்யாட் சென் காலத்தில் விழிப்புற்றது; சியாங்கேஷேக் ஆட்சி புரிந்தார்; அவர் தன் சர்வாதிகாரக் கொடுமையால் மக்களிடை பெருக்கிக்கொண்ட வெறுப்பு மாசேதுங்கின் வெற்றிக்கு வாய்ப்பளித்தது.

19-11-1893 அன்று உனான் மாநிலத்தில் ஓர் ஏழை உழவனின் மகனாய்ப் பிறந்தவர் தோழர் மாவ். வறுமையின் கொடுமையால் சிறு வயதிலேயே–ஏழாம் பிராயத்திலேயே, வயலில் இறங்கினார் மாவ். தனது பத்தாம் வயதிலேயே முதற் புரட்சியைச் சந்தித்தார் அவர். பதினான்காம் வயதான இளைய உழவனாயிருக்கையில் சமுதாயக் கொடுமைகளைச் சிந்திக்கத் தொடங்கினார்.

சமுதாயச் சிந்தனைகளோடு திரிந்த அவர் ஒரு நாள் ரிக்ஷாக்காரனை வண்டியில் உட்காரச் செய்துவண்டியைத் தான் இழுக்கத் தொடங்கிவிட்டார். அவர் நாடிய சமத்துவம் இது.

பின் ஆசிரியராக வேலை பார்க்க வேண்டும் என்ற விருப்போடு, தனது ஊரின் திண்ணைப் பள்ளிகளில் கற்றுவிட்டு, பிகிங்கில் உள்ள பல்கலைக் கழகத்திற்குச் சென்றார். அப்போதுதான் இரஷ்யாவில் நடந்த போல்ஷவிக் புரட்சியைக் கேள்விப்பட்ட அவர், அன்று முதல் பொதுவுடைமையை அறியத் தொடங்கினார். மார்க்ஸ், ஏங்கல்ஸ், முதலியோரை நூற்களின் வாயிலாகச் சந்தித்தார் அவர். 1919-ல் ஒரு பொதுவுடைமையரானார். 1921-ல் சீனப் பொதுவுடைமை இயக்கத்தை நிறுவுவதில் உதவினார்; பல உறுப்பினர்களைச் சேர்ப்பதில் ஆர்வம் காட்டினார். 1924-ல் "பொலிட்பீரோ" உறுப்பினரானார். அன்றையச் சீனாவின் மொத்த எதிரியாக–பொதுப் பகையாக ஜப்பான் இருந்ததால், அதை அழிப்பதில் மாவையும் தன்னுடன் சேர்த்துக்கொண்டார் சியாங். '27-ல் வெற்றி பெற்றதும், சியாங் பொதுவுடைமையரை வேட்டையாடினார். பலர் உயிரிழந்தனர். மா சிறையிடப்பட்டார், ஆனால் இலஞ்சம்கொடுத்து வெளி வந்துவிட்டார்.

மா. பாண்டியன்

அப்போது ஸ்டாலின் சீனாவில் பலத்த புரட்சி நடத்தத் திட்டமிட்டார். மா அதை மறுத்ததால் "பொலிட்பீரோ"விலிருந்து விலக்கப்பட்டார். மாவோ, தன் போக்கில் குடியானவரையும் சுரங்கத் தொழிலாளரையும் கொண்ட படை ஒன்றைத் திரட்டிக்கொண்டு, எல்லை ஓர மாநிலமான கியாங்சியில் தனி அரசு அமைத்தார். இது ஸ்டாலினுக்கும் பிடிக்காத திட்டமாகும். ஆனால் காலப் போக்கும் ஓங்கி உயர்ந்த மாவின் செல்வாக்கும் ஸ்டாலினைப் பணிய வைத்தன. '34-ல் மா, சீனப் பொதுவுடைமை இயக்கத்தின் தலைவரானார். ஸ்டாலின் வாழ்த்தும் உரைத்தார்.

1934! சியாங்கேஷேக்கின் விழிகளைக் குத்தின மாவின் வளர்ச்சி. மாவை எதிர்க்க ஒரு புதிய படையை அனுப்பினார், சியாங். மாவும் அவரது 80000 தொண்டர்களும் 6000 கற்கள் நடந்தே சென்று ஏனான் என்ற பகுதியை அடைந்தனர். வழியில் நடையால் தளர்ந்து, மாவின் ஐந்து மக்கள் உள்பட 60000 பேர் மாண்டனராம். இலட்சியப் பயணத்திடை ஏற்பட்ட இந்த இழப்பு, அன்னார் அடைந்த மலைக் குகைகளில் அமைத்துக்கொண்ட அரசால் ஓரளவு மறக்கப்பட்டது. மாசேதுங் அங்குதான் பொதுவுடைமை அரசை நிறுவினார். எல்லார்க்கும் எல்லாம்–அனைவருக்கும் அனைத்தும் என்ற நிலையை உருவாக்கினார்.

1937-ல் ஜப்பானியர் சீனாவைத் தாக்கிடவே, மா தனது தேர்ச்சியான கொரில்லா முறையால் போரிட்டார். சியாங் ஒருபுறம் தள்ளாடிக்கொண்டிருக்க, மா மறைந்து மறைந்து சண்டையிட்டு ஜப்பானியரைத் துரத்தினார். உழவர் சமுதாயத்தின் விழிகள் அவரது தொண்டுகளால் கவரப்பட்டன. சீன மக்கள் அவரைக் கேட்கத் தொடங்கினர்.

இரண்டாவது உலகப் போர் முடிந்தும், ஜெனரல் ஜார்ஜ் சி. மார்ஷல் என்பார் மாவுக்கும் சியாங்குக்கும் சமாதானம் செய்து வைக்க முயன்றும் பயனளிக்கவில்லை. அவர் இருவரையும் ஒற்றுமைப்படுத்திக் கூட்டாட்சி காண முயன்றார். இருவரும் ஒத்து வரவில்லை. சியாங்கின் ஆட்சியிலோ ஊழலும் நாற்றமும் பெருகின. விலைவாசிகள் ஏறின. சியாங்கின் படைஞர்களும் மாவின் சொல்லைக் கேட்கத் தொடங்கிவிட்டனர். உயிர் வாழ, தலை தப்பி ஓடினார் சியாங், பார்மோசாவுக்கு. 1-10-'49 அன்று மாசேதுங், ஐந்து மஞ்சள் விண் மீன்கள் பொறிக்கப் பெற்ற தனது செங்கொடியை உயர்த்தினார்.

"இன்று முதல் சீன மக்கள் குடியரசு இங்கு அரசேற்கிறது!"

— 10-ம் பக்கம் —

சங்ககாலக் கல்வி நிலை

டாக்டர்
மா. இராசமாணிக்கனார்
எம். ஏ., எம். ஓ. எல்., பிஎச். டி.

இன்றையக கல்வி நிலை

நமது நாட்டில் வெள்ளையர் ஆட்சி ஏற்பட்டது முதல் இன்று வரையில் ஏறத்தாழ இருநூறு ஆண்டுகளாக, பல ஆயிரக்கணக்கான தொடக்கநிலைப் பள்ளிகள் ஏற்பட்டுள்ளன. ஆயினும் இன்று இந்நாட்டில் எழுதப் படிக்கத் தெரிந்தவர் தொகை நூற்றுக்குப் பதினேழுதான் என்பது கவனிக்கத் தக்கது. இப்பதினேழு பேரும் தமிழ் மொழியிலோ, ஆங்கிலத்திலோ போதிய புலமை பெற்றவர் அல்லர்; ஆங்கிலத்திலோ தமிழிலோ நன்கு பேசவோ எழுதவோ இயலாதவர்.

இடைக்காலக் கல்வி நிலை

தமிழகத்தில் பல்லாயிரக் கணக்கான சாதிகளும் அவற்றின் உட்பிரிவுகளும் மலிந்து கிடக்கின்றன. வெள்ளையர் ஆட்சி ஏற்படுவதற்கு முன்பு இன்னின்ன வகுப்பார்தாம் கல்வி கற்கவேண்டும் என்னும் வரையறை இருந்து வந்தது. மிகச் சில வகுப்பினரே கல்வி கற்க உரிமை பெற்றிருந்தனர். குறிப்பிட்ட சில வகுப்பார் சமுதாயத்தில் மிகத் தாழ்ந்தவர் என்று வெறுக்கப்பட்டு ஒதுக்கப்பட்டனர். வேறு சில வகுப்பார் தொழிலாளர் என்ற காரணத்தால் சமுதாயத்தில் தனியாக ஒதுக்கப்பட்டிருந்தனர். இங்ஙனம் பற்பல காரணங்களால் தமிழ்ச் சமுதாயம் சின்னபின்னப்பட்டுச் சீர் கெட்டிருந்தமையால், மன்னர்களால் மதிக்கப்பட்ட மறையுவருட் பெரும்பாலர் வடமொழிக் கல்வியையும் பிறவுயர் வகுப்பினர் தமிழ்க்கல்வியையும் கற்று வந்தனர். பாடத்திட்டத்தில் சமயக்கல்வியே சிறப்பிடம் பெற்றிருந்தது. இடைக்கால நூல்கள் பல சமயத் தொடர்பான நூல்களாகவே இருத்தல் இந்த உண்மைக்கு ஏற்ற சான்றாகும்.

சங்க காலத்தில்

ஏறத்தாழ இன்றைக்கு 1800 ஆண்டுகட்கு முற்பட்ட காலம் 'சங்க காலம்' என்று கூறப்படும். அக்காலத்தில் தொல்காப்பியம் போன்ற இலக்கண நூல்களும், திருக்குறள், புறநானூறு போன்ற இலக்கிய நூல்களும் தோன்றின. புறநானூறு, அகநானூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, பத்துப்பாட்டு என்னும் தொகை நூல்கள் தோன்றின. இவற்றில் உள்ள பாக்கள் பல; இவற்றைப் பாடிய புலவர் பலர்; அவருள் அரசர் சிலர்; அரசமாதேவியர் சிலர்; புலவர் பலர்; மருத்துவர், கூலவாணிகர், கொல்லர்–முதலிய பல தொழில் செய்தோர் பலராவர். சமுதாயப் பெண்களுள் காவற்பெண்டு, குயத்தி, பாண்மகள், வேட்டுவச்சி முதலியோரும் இடம் பெற்றுள்ளனர். அதாவது, சமுதாயத்தின் மிகவுயர்ந்த அரசன் முதல் சிறிது காலம்வரை மிகத் தாழ்ந்தவர் என்று கருதப்பட்ட குறத்தி ஈருக ஏறத்தாழ எல்லாவகை மக்களும் கல்வி கற்றிருந்தனர் என்பது இப்பாடல்களால் நன்கு விளங்குகிறது. விளங்கவே, சங்க காலத்தில் இன்னார்தாம் கல்வி கற்கவேண்டும் என்ற வரையறையில்லாமல் எல்லோருமே கல்வி கற்க வசதி அளிக்கப்பட்டிருந்தது என்பது தெளிவாகின்றது.

காவற் பெண்டு

வளமனையைக் காக்கும் காவற் பெண்டு தன் சிறு குடிலில் இருக்கின்றாள். அவள் ஒரு கவியரசி; அவள் மகன் சிறந்த போர்வீரன். அவன் போர்க்களம் சென்றிருக்கிறான். அதனை அறியாத அவனது நண்பன், அவனைத் தேடிக்கொண்டு காவற்பெண்டின் குடிலுக்கு வந்தான்; அக்குடிலில் இருந்த தூணைப் பற்றிக்கொண்டு நின்றான்; தன் நண்பனின் நற்றாயை நோக்கி, "நின் மகன் யாண்டுளன்?" என்று கேட்டான். அவன் அவளை அன்புற நோக்கி, "இச்சிறிய வீட்டில் உள்ள தூணைப் பற்றி நின்று, 'நின் மகன் யாண்டுளன்?' என்று கேட்கின்றாய். வலிய புலி இருந்து சென்ற குகை போல அவனைப் பெற்ற வயிறு இது தான். அவன் போர்க்களத்தில் இருப்பான்" என்று விடையளித்தாள். இவ்வாறு உரை நடையில் அவள் விடையிறுத்தாளா? இல்லை, இல்லை; கீழ் வரும் செய்யுளாக விடையளித்தாள்:

"சிற்றில் நற்றூண் பற்றி
நின்மகன்
யாண்டுள னோஎன வினவுதி;
என்மகன்
யாண்டுள னாயினும் அறியேன்;
ஓரும்
புலிசேர்ந்து போகிய
கல்லளை போல
ஈன்ற வயிறோ இதுவே!
தோன்றுவன் மாதோ
போர்க்களத் தானே"

சங்ககாலக் காவற் பெண்டின் கவிதையைக் கண்டு மகிழ்க!

பொன் முடியார்

பொற் கம்பிகள் போலத் தலை முடி நரைத்த மூதாட்டியார் ஒருவர் 'பொன்முடியார்' என்று அக்காலப் புலவரால் அழைக்கப்பட்டார். அவ்வம்மையார் கீழ்வரும் கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்: "மகனைப் பெற்றுச் சமுதாயத்திற்குத் தருதல் எனது கடன்; அவனைக் கல்வி கேள்வி ஒழுக்கங்களில் சிறந்தவன் (சான்றோன்) ஆக்குதல் தந்தையினது கடமை. அவனை நல்ல குடிமகனாக வாழச் செய்வது வேந்தன் கடமையாகும். அவனுக்குத் தேவையான போர்க் கருவிகளைச் செய்து கொடுத்தல் கொல்லன் கடமையாகும். போர்க் களத்தில் யானையை வென்று மீளுதல் மகனது கடமையாகும்." இக்கருத்து அடங்கிய கீழ்வரும் செய்யுள் பொன்முடியார் பாட்டாகும்:

"ஈன்று புறந்தருதல்
என்தலைக் கடனே
சான்றோன் ஆக்குதல்
தந்தைக்குக் கடனே
நன்னடை நல்கல்
வேந்தர்க்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல்
கொல்லற்குக் கடனே
ஒளிறுவாள் அருஞ்சமம்
முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல்
காளைக்குக் கடனே"

நெடுஞ்செழியன்

'கண்ணுடையர் என்பவர்
கற்றவர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்!'

என்னும் உண்மையைப் பழந்தமிழ் அரசர் பண்புற உணர்ந்தவர். அதனால் அவர்கள் எல்லோருக்கும் கல்வி வசதியளித்தனர்; வெளிப்படையாகக் கல்வியின் நலனைக் குடி மக்களுக்கு வற்புறுத்தி வந்தனர். பாண்டியன் நெடுஞ்செழியன், "ஒரு தாய், தான் பெற்ற மக்களுள் கற்றவனையே பெரிதும் விரும்புவாள்; சமுதாயத்தில் உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற வேறுபாடு இருந்தாலும் கல்வியில் தேர்ந்த தாழ்ந்தவனையே உயர்ந்தவன் விரும்புவான்; நாடாளும் மன்னன் ஒரு குடியிற் பிறந்த பலருள் வயதால் மூத்தவனை யோசனைக்கு அழையாமல், அறிவாற் சிறந்தவனையே அழைத்து யோசனை கேட்பான். இங்ஙனம், கற்றவனே வீட்டிலும் சமுதாயத்திலும், நாட்டிலும் சிறப்படைவான். ஆதலால் ஒவ்வொருவரும் எப்பாடு பட்டாகிலும் கல்வி கற்பது நல்லது," என்னும் கருத்துப்பட ஒரு செய்யுளைப் பாடியுள்ளான். அச் செய்யுள் பின்வருமாறு :—

"உற்றுழி உதவியும்
உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது
கற்றல் நன்றே;
பிறப்போர் அன்ன
உடன்வயிற் றுள்ளும்
சிறப்பின் பாலால்
தாயும் மனந்திரியும்;
ஒருகுடிப் பிறந்த
பல்லோ ருள்ளும்
மூத்தோன் வருக
என்னாது அவருள்
அறிவுடை யோனாறு
அரசும் செல்லும்;
வேற்றுமை தெரிந்த
நாற்பா லுள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும்
அவன்கண் படுமே."

★

["அண்ணல் சுப்பிரமணியனார் மணிமலர்" என்ற தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டது. இம்மலரின் விலை ரூ. 3-00. கிடைக்குமிடம் : வள்ளுவர் பதிப்பகம், புதுக்கோட்டை.]

★ ★ ★

அன்னை சொர்ணம்மாள் நினைவுக் கட்டளைச் சொற்பொழிவுகள்.

★

டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் தம் அன்னையார் நினைவாகச் சென்னைப் பல்கலைக் கழகத்திற்கும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கும் தலா ரூ. 25 ஆயிரம் அண்மையில் வழங்கியது அனைவரும் அறிந்ததே. மேற்படிக் கட்டளை மூலம் ஆண்டுதோறும் அவ்விரு பல்கலைக் கழகங்களிலும் தமிழ் ஆராய்ச்சிச் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பெறும். இவ்வாண்டு முதல் இது நிகழும்.

கடந்த 25, 26 & 27-2-59 நாட்களில் சென்னைப் பல்கலைக் கழக செனட் மண்டபத்தில் "வள்ளுவர் காலம்" பற்றி அரிய ஆய்வுரை நிகழ்த்தி, தொடக்கம் செய்தார், இலங்கை முன்னாள் அமைச்சர் திரு. எஸ். நடேசர் அவர்கள்.

திருவாளர்கள் வையாபுரியாரும், நீலகண்ட சாஸ்திரியாரும் வள்ளுவர் காலத்தை 7-ம் நூற்றாண்டிற்கு இழுத்திருந்தனர், முன்பு. திரு. நடேசர் அரிய காரணங்கள் காட்டி அதை மறுத்துரைத்து, வள்ளுவர் கிறித்து சகாப்தத்திற்கு முந்தியவர் என நிலைநாட்டினார். அவர் தம் உரைக்கு மறைமலையடிகளாரின் கருத்துக்களையும் ஊன்றுகோலாகக் கொண்டார்.

சொற்பொழிவைக் கேட்டு மகிழ்ந்த ஆயிரக்கணக்கான மாணவர்களும் ஆசிரியர்களும், திரு. நடேசனார் வாதத்தையும், அதைக் கேட்க வாய்ப்பளித்து அன்னை சொர்ணம்பாள் கட்டளையை நிறுவிய திரு. சேதுப்பிள்ளையையும் பாராட்டி வாழ்த்தினர்.

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 5 || 14--3--59 | இதழ் 39

புதிய வரியுமில்லை! இனிய வாழ்வுமில்லை!

"இவர் பேனா எடுத்துவிட்டால், எதிரே ஈ நிற்காது; காக்கை நிற்காது. வறுமை இருக்காது; வாட்டம் இருக்காது. எதுவுமே வராது. இவர் போட்ட புள்ளியின்படிதான்-கிழித்த கோட்டின்படிதான் எல்லாம் நடக்கும்!'

அதே வரிசையில் நமது மாநில நிதியமைச்சருக்குத் தரப்படும் பாராட்டு மடல்களின் ஒரு பகுதிதான் இறுதியாய்ச் சொன்னது. அவர் பொருளியலில் மாமேதை. தாளைக் கறுப்பாக்கினால் பகைவர் முகமும் கறுப்பாகிவிடுமாம். எழுத்திலேயே சூராதிசூரர் அவர். அவர் உருவாக்கி வெளியிட்டுள்ள இந்த வரவு செலவுத்திட்டத்தைப் பார்க்கும்போது, நமக்கு ஒன்றும் புதிதாகப் படவில்லை. ஆனால் தெருவோரத்து வித்தைக்காரன்தான் நினைவுக்கு வருகிறான்.

தகரடப்பாவை தன் கோலால் மூன்று முறை தட்டி "எங்கே, எல்லோரும் கையை நீட்டுங்கள்!" என்பான். அவனது ஆழ்வாராதிகளும் ஏமாளிகள் சிலரும் கையைப் போட்டி போட்டுக்கொண்டு நீட்டுவர். தன் திறத்தால் - "மந்திரத்தால்" - வரவழைத்த மிட்டாயை எல்லோருக்கும் கொடுப்பான். மேலும் தன் வாய்த்திறத்தையும் கைத்திறத்தையும் காட்டி விட்டு, இறுதியாகத் துண்டை விரிப்பான். காலணுக்கூடப் பெறாத மிட்டாயைப் பெற்றுத் தின்று, அவன் "வித்தை"யில் மயங்கிய ஏமாளிகள் நாலணா, ஓரணா எனப் போட்டுச் செல்வர். ஓரணா மிட்டாயையும் ஒருமணி நேரப் பேச்சையும் முதலாக வைத்து வித்தை காட்டியவன், இரண்டு மூன்று ரூபாய் வருவாயோடு அடுத்த இடத்திற்கு மூட்டை கட்டுவான்.

இந்தத் தெருவோரத்துக் காட்சியைத்தான், சட்ட மன்றில் அவர் அடித்துக்கொண்ட பெருமை நினைவூட்டுகிறது. "புதுவரி ஏதுமில்லை! பொதுமக்களே உங்கட்கு நல்ல சேதி!" என்று முழக்கி நொறுக்கினாராம். கைகாட்டிகளும் அவர் காட்டிய வெள்ளைக்காக்கைக்கு நான்கு கால்கள் இருப்பதைக்கூடக் கண்டு எடுத்துக் கூறினராம். ஆனால் அந்த வெள்ளைக் காக்கையின் சாயமோ வெளுத்துவிட்டது, அதற்குள்.

"புதிய வரிகள் இல்லை!" என்றார்.

"நல்லது; தொல்லைகள் இல்லை!" என்ற பதிலை எதிர்பார்த்துத்தான் சொல்லியிருப்பார். ஆனால் சராசரி மனிதனுக்கும் தேவையானவற்றின்மீது அழகாகக் குறி வைத்திருக்கிறார்.

முதலாவதாக, பாலுக்கு வரி விதித்திருக்கின்றனர். அழுகும் பொருள்களான மீன், வெங்காயம், இறைச்சி, கிழங்கு வகைகள், பழ வகைகள் முதலியவற்றின்மீதும் விற்பனை வரி போட்டிருக்கின்றனர். இது இந்தியாவில் வேறு எங்கும் இல்லாத ஒன்று, வரி விதிக்கப்பட்டதனால் இவற்றின் விலை மேலும் உயரக்கூடும்; அதனால் பாதிக்கப்படுவோர் இந்நாட்டு மன்னர்கள் தானே? அழுகுகின்ற பொருள்களின் விற்பனை என்றும் ஒரே சீராய் இருக்கும் என்பதற்கில்லை. எனின் அதன்மீது ஒரு குத்து மதிப்பாக வரி விதிப்பது தவறன்றோ?

இறைச்சி போன்ற அழுகும் பொருள்களுக்கு விற்பனை வரி விதிப்பதினாலேயே ஓரளவு வருமானம் உண்டாயின், அத்தொழிலை அரசே ஏற்று நடத்தலாமே! மேலும் மேலும் வருமானம் கிடைக்குமே! அண்ணா கசாப்புக் கடைகளை அரசினர் ஏற்று நடத்தச் சொன்னால் சினக்கும் அமைச்சர், அதற்கு வரி விதித்து மட்டும் வருவாய் பெற நினைப்பதேன்?

ஏழையரைத் தொந்தரவு செய்யாமலே அரசினர் வருமானம் பெறும் வழிகளையும் அண்ணா கூறியுள்ளார். சினிமாவையும் பஸ்ஸையும் அரசினர் உடைமையாக-தேசிய மயமாக்கச் சொல்கிறார். அதில் பெறும் வருவாயால் ஓரளவு வரிக்கொடுமையைத் தவிர்க்க முடியும். அல்லாது, செல்வம் ஓரிடத்திலேயே தேங்குவதையும் தவிர்க்க முடியும்.

அடுத்து, நல்ல விளைச்சல் கண்டிருப்பதாகச் சொல்கிறார். ஆனால் உழவனும் ஏழையும் அதனால் பயன் பெற்றதாகக் காணோமே! உழவன் தனது கிணற்றின் மோட்டாருக்கான டீசல் எண்ணெய்யைக் குறைந்த விலையில், விற்பனை வரியில்லாமல் பெறமுடியவில்லையே! ஏன் இக்கொடுமை? அவனுக்கு எளிதில் விதைநெல் கிடைப்பதற்கான வழியுமில்லையோ? அதற்கான வழி வகையைத் திறந்துவிட்டிருக்கிறதா இவ்வாண்டு வரவு-செலவுத் திட்டம்?

எண்ணற்ற தொல்லைகள் இப்படி, போக்கப்படாதிருந்தும், "புதிய வரிகள் இல்லை! பார்; பார்! இனிய சேதி இது. கேள்; கேள்!" என்கிறார் நிதியமைச்சர். தெருவோரத்து வித்தைக்காரன்தான் நினைவுக்கு வருகிறான். ★

தென் சென்னை மகளிர் மன்றத் தொடக்க விழா.

மங்கையர் கூடிச் செயல்பட்டால் எந்தச் செயலும் ஒன்றுக்கு நூறாய் வெற்றிதரும் என்பர். வலிமை சேர்க்கும் தாய்மார்களின் திறனை மதியாதாரும் கிடையாது. ஆனால் அந்தப் பெண் குலம்தான் பல நேரங்களில் அடங்கி, 'நமக்கெதற்கு நாட்டுப் பிரச்னைகள்?" என ஒதுங்கித் தன் பங்கைச் செலுத்தத் தவறி விடுவதுண்டு. அதனால் சீரழிந்த எண்ணக்கோட்டைகள், பொன்னான திட்டங்கள் பலப்பல. வாழ்விலும் தாழ்விலும் பங்குகொள்ளத் தமக்குள்ள உரிமையை நிலைநாட்டுவது போல வேறு உயிரான பணி ஏதும் பெண்டிர்க்குக் கிடையாது. இந்த உண்மையை உணர்ந்த திருமதி சத்தியவாணிமுத்து போன்ற நம் கழகத் தாய்மார்கள் கண்ட நல்லற அமைப்புத்தான் மகளிர் மன்றம்.

"மங்கையர், தம் வலிமையை அப்பள ஆராய்ச்சியிலும் இந்தி வகுப்பிலும் கழித்துக் கொண்டிருப்பது மடமை. கேளிக்கைக்காகவும் கூத்துக்காகவுமே கிளப்கள் உருவாக்கி அதில் பங்குகொள்ளும் பெண்டிர் தம் மேலான ஆற்றலை இழந்துவிடுகின்றனர்!" என்பன போன்றவற்றை உணர்ந்தனர். "நாட்டு விடுதலைப் பணியில் நமது பங்கையும் செலுத்துதலே-வலிய பெரிய மறக்குல மைந்தர்களை இனப்போருக்கு அனுப்புதலே, நம்மின் கடமை!" என்று கண்டு அமைக்கப்பட்ட மன்றமே-திராவிட முன்னேற்றத்திற்கு உழைக்கும் தாய்மார்களின் அணியே, மகளிர் மன்றம். இதன் பிரிவாய், 8-3-57 அன்று கோடம்பாக்கத்தில் **"தென்சென்னை மகளிர் மன்றம்"** தொடங்கப்பெற்றது.

சிந்தை மகிழ, பழைமை நிலைகாண, புதுமைப் போர்புரிய, கொதித்தெழுந்த தாய்மார்கள் அனைவரும் ஒருசேரக் குழுமியிருந்தது, கண்கொள்ளாக் காட்சியாகும். கருத்து விருந்து தரும் பொருளுரைகளைக் கேட்க-அறிந்த வழிநடக்க-மன்றம் நிறைந்து வழிய, அன்னார் கூடியிருந்தது வியக்கத்தக்க சாதனை; பெண் குலத்தின் வலிமை காட்டும் தெள்ளிய நிருபணம். இப்படி ஊருக்கு ஒரு கிளை தோன்றிவிட்டால் இனி கவலையே இல்லை; திராவிட நாடு திராவிடருக்காதல் நிச்சயம்! நிச்சயம்!

அன்றையத் தொடக்க விழாவில் திருமதி **நமசிவாயம்** மொழி வாழ்த்துப் பாடிவிட்டு, தலைவியை முன்மொழிந்தார்கள்.

திருமதி **பார்வதிகண்ணதாசன்** தலைமை ஏற்றார்கள். திராவிட சமுதாயத்தின் வளர்ச்சியில் பெண்டிர்க்குள்ள பங்குகளை எடுத்துக் கூறி, அன்னார் அதனை நிறைவேற்றத் தவறமாட்டார்கள் என்று விளக்கினார்கள்.

அடுத்து, மன்றத்தைத் தொடக்கி வைத்து, விரிவுரையாற்றினார்கள், அண்ணி **இராணி அண்ணாதுரை**. தலைமுறைக்கு ஒரு ஒளி விளக்காய்த் திகழ்ந்தது அன்னாரின் அறிவுரை.

அடுத்து **வெற்றிச்செல்வி அன்பழகன்**, அவர்கள் மங்கையர் மாண்பையும், மன்றத்தின் நோக்கையும் எடுத்துக் கூறினார்கள்.

ஆசிரியர் **கண்ணதாசன்** அவர்கள் மன்றத்திற்கு வாழ்த்துரைத்து, தாய்க்குலத்தின் எழுச்சியைப் பாராட்டினார். பண்டை நாட் பெண்புலவர்கள் சிறப்பை எடுத்துக்காட்டி, அன்னார் சிறந்த அறிவுத்திறனும் விடுதலையுணர்வும் இன்றும் மிளிரக் காட்டுவது மகளிர் மன்றம் என்றார்.

மாணவத் தோழியர் **சற்குணம்** பேசுகையில், "தமிழகத்தின் தாய்மார்கள் கொண்டுள்ள தன்மான எழுச்சி விடுதலைப் பண்ணின் வலிய குரலாக அமைந்துள்ளது!" என்றார்.

அண்ணா அவர்கள் மாதர் படையின் உற்சாகம் மிக்க வரவேற்புக்கிடையே, பேசினார்கள். "சமுதாயத்தின் உயர்விற்கு, பெண்கள் அறிவுத் தெளிவு பெறவேண்டும். அதைப் பெற்றால்தான் மதமயக்கமும் சாதிப் பித்தமும் அழியும்!" என்றதோடு "நல்லதொரு மக்களாட்சியை நிறுவும் திறன் மகளிரின் கையில்தான் உள்ளது" என்றும் சொன்னார்கள்.

மொத்தத்தில் அன்று. கோடம்பாக்கம் விடுதலைப் படையின் முழு உருவையும் அறிந்தது. சென்னை, தாய்மாரின் எழுச்சியைப் பாடியது. திராவிட உள்ளம், எதிர்கால வெற்றியைக் கண்டது.

நாளையும் வளர்ந்து நல்ல பணிகளின் தாயாய் வாழட்டும் மகளிர் மன்றம்.

—"கண்டுவந்தோன்"

முன்கதைச் சுருக்கம் :-

கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்டான். அவன் தம்பி ஊமைத்துரை சிறையிலடைக்கப்பட்டான். விடுதலை உணர்வு கொண்ட வீரத்தேவனும் சிங்கத்தேவனும் பிறரும் சிறையை உடைத்து ஊமையனை வெளியேற்றத் திட்டமிட்டு, சிவகெங்கை மருதரசரின் உதவி கேட்கின்றனர். பெரியமருது உதவிபுரிய யோசித்தாலும், சின்னமருது மாற்றுருவில் பாளையங்கோட்டைக்கு வந்து தன் கடனை முடிக்கிறார். சிறை உடைகிறது பறவை பறந்துவிட்டது

ஆனால் வீரத்தேவன் சிறை உடைப்பில் காட்டிய அக்கறையும், அதனால் அவன் பெறற பெருமையும் சிங்கத்தேவனுக்குப் பிடிக்கவில்லை அது மட்டுமல்ல அந்த வெறுப்புக்கு காரணம். வீரத்தேனின் தங்கை, கண்ணுத்தாள். அவளை, சிங்கத்தேவன் பெண் கேட்டபோது அவளின் தந்தை சூடாகப் பேசியதும் சினத்தின் வித்தாகியது ஆனால் கண்ணுத்தாளை வீரத்தேவன் ஊரில் இல்லாதபோது கூட்டிக்கொண்டு வந்து பாளையங்கோட்டையில் குடி அமைத்துவிட்டான் சிங்கத்தேவன்.

தங்கை கண்ணுத்தாளைக் காணது வீரத்தேவன் வருந்தினான் எனினும், அவனின் முழு உணர்ச்சிகளையும் சிறை உடைப்பே கொள்ளைகொண்டு விட்டது.

. சிறை உடைப்பிற்குப்பின், பாளையங்கோட்டையைஅடுத்த காடொன்றில் ஊமைத்துரையின் தலைமையில், சிறை உடைப்பிற்கு வந்திருந்த வீரத்தேவன், சிங்கத்தேவன், பூரி ராமசாமித் தேவர், அவர் மகளும் வீரத்தேவனின் காதலியுமான அஞ்சுகம், பொம்மையா, சுப்பம்மா முதலிய பலரும் கூடி அடுத்த செயலைச் சிந்திக்கின்றனர். ஆனால் சின்னமருதரசரோ வந்த சுவடு தெரியாமல் திரும்புகிறார். வழியில் தன் குதிரை இறந்துவிட வேறு ஒரு குதிரையை விலைக்கு வாங்கி மேற்செல்லுகிறார். ஆங்கிலத் தளபதி ஒருவனின் திருட்டுப் போன குதிரை அது. அதில் அவர் சென்றதால் அவர்தான் குதிரைத் திருடன் என நினைத்துக் கூடாரத்துக்கு இழுத்துச் செல்கின்றனர் கம்பெனி வீரர்கள். அங்கே சின்னமருதுதான் கைதி என்றுணர்ந்த ஆங்கிலேயர் அவர் மேலுள்ள நம்பிக்கையால் விடுதலை செய்து சிவகெங்கை போக வழி விடுகின்றனர்.

மறுபடியும், கண்ணுத்தாள் புரட்சி வீரர்களோடு தானும் பாளையங்கோட்டை செல்ல நினைத்து அவர்கள் சென்ற வழி தேடிச் செல்கிறாள். வீண் அலைச்சலாகிறது. 'எப்படியும் பாஞ்சாலங்குறிச்சிக்கு அன்னார் வந்து தானே தீரவேண்டும்!' என்ற எண்ணத்தோடு அவ்வூர் நோக்கிச் செல்கிறாள். வழியில் தெரிந்த சிற்றூரில் சென்னகேசவ நாயக்கன் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து களைப்பாறிக் கொண்டிருந்தாள் கண்ணுத்தாள். அவளை வீட்டுக்குள் இட்டுச் சென்று கெடுக்க முனைகிறான் சென்ன கேசவன்.

கறுத்தான் மூலம் சின்னமருது புரட்சியில் கலந்து கொண்டதை யறிந்த பெரியமருது சினக்கிறார்.

வஞ்சமனம் கறுத்திருப்பதால், இவனுக்கும் கறுத்தான் என்று பெயர் வந்தது போலும். அவன் கண்டது, கற்பனை செய்தது-கேட்டது, புனைந்தது ஆக அனைத்தையும் சொல்லி விட்டான் ஒன்றுக்குப் பத்தாக மருதரசரிடம்.

சிவகெங்கைச் சீமை நலம் கருதி, தம்பியை அரண்மனைச்சிறுவயலுக்குப் போகச் சொல்கிறார்.

நிதானமான ஆலோசனைகளுக்குப் பின்தான் செயல்படுவார் பெரிய மருதரசர். சின்னமருதரசருக்கோ துடிப்பும் ஆர்வமும் உடன்பிறந்தவை. எதையும் நினைத்தவுடன் செய்துமுடிக்கத் துடிப்பவர்! சின்ன மருது புண்பட்ட மனத்தோடு சிறுவயல் செல்கிறார்.

சென்னகேசவன் வெறி உச்சத்திற் கேறுகையில் அவன் ஊமைத்துரைப் படைக் குதிரைகளின் குளம்பொலி கேட்டுத் தப்பி ஓடுகிறான். படைஞர்களால் விடுவிக்கப்பட்டு, கணவனையும் அண்ணனையும் ஒருசேரக் கண்ட கண்ணுத்தாள் மயங்கி விழுகிறாள். மருத்துவம் பார்க்க வந்தவர் அவள் கர்ப்பவதி என்பதைச் சொல்லிச் செல்கிறார். சிங்கத்தேவனே கண்ணுத்தாளை அறியாதவன் போல் நடந்து கொள்கிறான்.

அனைவரும் பாஞ்சைக்கு வந்து சேர்ந்து கம்பெனியாரால் கோட்டை இடிக்கப்பெற்ற இடத்தில் புதிய கோட்டை ஒன்றை ஒரே இரவில் கட்டி முடிக்கின்றனர்.

கோட்டை நிர்மாணத்தில் ஈடுபட்டிருந்த சிங்கத்தேவனைத் தனியே அணுகி "எதுவும் வீரத்தேவனுக்குத் தெரிவிக்காது வாழ்வேன்" என்கிறாள்! எனினும் சிங்கத்தேவனிடமிருந்து ஏதும் பதிலில்லை. மனதுடைந்த கண்ணுத்தாள் சிவகெங்கையை நோக்கிச் சென்றாள். நடைக் களைப்பும் கர்ப்பத்தளர்ச்சியும் தன்னை வாட்ட வாட்ட நடந்துவந்த கண்ணுத்தாள் மயங்கி விழுந்தாள். எதிரே வந்த குதிரை மறவர் கூட்டம் அவளின் களைப்பைப் போக்கி, கதையைக் கேட்டு, அமைதி கூறித் தம்முடன் பாஞ்சாலங்குறிச்சிக்கு வரும்படியும், சிங்கத்தேவனிடம் சமாதானம் செய்துவைப்பதாகவும் கூறுகிறது. அக்குழுவின் தலைவர் சின்னமருதுதான் என அறிந்த அவளும் உடன்படுகிறாள்; செல்கிறாள்.

பாஞ்சையில் கோட்டைக் காவலரிடம் தன் பெயரைத் தெரிவித்துக் கொள்ள விரும்பாது நேரடியாக ஊமைத்துரையைக் காண விரும்பினார், அவர்.

காவல் கடுமையாய் இருந்தது. ஈயும் கோட்டைக்குள் நுழைய முடியவில்லை, காவலரின் வினைக்களுக்குத் தப்பி. சின்னமருது முதலில் தன்னை வழிப்போக்கனென்று கூறிக்கொண்டார். 'வழிப்போக்கருக்குக் கோட்டைக்குள் என்ன வேலை?' என்று எண்ணினார்கள் காவலர்கள். கோட்டை கட்டப்பட்ட சேதி கம்பெனிப் படைக்குத் தெரிந்து விட்டது. அது பாஞ்சாலங்குறிச்சி நோக்கிப் புறப்பட்டு ஆரவாரத்தோடு வரும் சேதியும் பாஞ்சைக்குத் தெரிந்துவிட்டது. அதனால்தான் இத்தனை கடுபிடிகளும் கேள்விகளைகளும். திண்டாடித் திணறிய சின்ன மருதுவின் பதில்கள் குழப்பம் நிறைந்தவையாய் இருந்தன. எனவே சந்தேகம் மிகக்கொண்டு, சின்ன மருதுவையும் அவர் குழுவினரையும் கைது செய்து கோட்டைக்குள் கொண்டுபோயினர் காவலர்கள். என்ன செய்வர் சின்னமருதுவும் குழுவினரும்? காவலர்கள் நேரடியாய் ஊமைத்துரையிடமே அவர்களை இட்டுச் சென்றால் நல்லதுதான் அங்கே வீரத்தேவனும் சிங்கத்தேவனும் சேர்ந்து இருந்துவிட்டால்...? நிலைமை சீர்திருந்தி, சந்தேகம் தீருமட்டும் கண்ணுத்தாள் அவர்கள் கண்ணில் படாமலிருந்தால் தானே நல்லது! சின்னமருதரசின் சிந்தனை சுழன்றது... ★

தொடர்கதை ரசிகர்களுக்கோர் அறிவிப்பு

★

அன்புள்ள நண்பர்களே!

வணக்கம். உங்களுக்கு வருத்தம் தரக்கூடிய செய்தி ஒன்றைத் தெரிவித்துத் தீரவேண்டிய கட்டாயத்திலிருக்கிறேன். ஒரு ஆறு வாரங்களுக்கு "ஊமையன் கோட்டை" தொடர் கதையை எழுதக்கூடிய அமைதியும் ஓய்வும் எனக்கில்லை. சிலபல காரணங்களுக்காக, "சிவகெங்கைச் சீமை" திரைப்படத்தை ஏப்ரல் மாதத்திலேயே வெளியிட இருக்கிறேன். அதோடு நகர சபைத் தேர்தல்களுக்கும் ஓரளவு நேரம் ஒதுக்கவேண்டியவனாயிருக்கிறேன்.

பரபரப்பான மனோநிலையில் தெளிவான கருத்துக்கள் பிறப்பதில்லை. அவசரக் கோலம் அள்ளித் தெளித்த நிலையில் தொடர் கதையைத் தொடர விரும்பாதவனாய் இருக்கிறேன். நண்பர்கள் மன்னிக்க வேண்டும். மே முதல்வாரத்திலிருந்து தொடர்கதை நிச்சயமாக மீண்டும் தொடரும்.

அதுவரை உங்களுக்கு அரிய விருந்தொன்று தொடர்கிறது. அடுத்த இதழிலிருந்து தென்றலின் இதே இரண்டு பக்கங்களும், "சிவகெங்கைச் சீமை" படங்களையும் கருத்துக்களையும் தாங்கி வரும். அதோடு ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு கவிதை எழுதுகிறேன். ஏப்ரல் மத்தியில் "சிவகெங்கைச் சீமை அனுபந்தமாக" ஒரு இதழ் மலரும்.

நண்பர்கள் மன்னித்து என்றும் இதேபோல் ஆதரவு அளிக்கக் கோருகிறேன்.

அன்பன்,
கண்ணதாசன்.

காமராசர் கணக்கு!

"வெள்ளையன் வெளியேறி இத்தனை ஆண்டு காலமாகியும், ஏழைகளின் வாழ்வில் ஏன் உயர்வு தென்படவில்லை ?"

"சுதந்திரம் பெற்ற ஒரு நாட்டில், அது அடிமைப்பட்டிருந்த காலத்தில் இருந்ததை விட நிலைமை மோசமானதற்குக் காரணம் என்ன ?"

"அந்நியன் அரசுபுரிந்த காலத்தில் வசூலிக்கப்பட்ட வரித் தொகையைப் போல் மூன்று மடங்கு அதிகப்படியான தொகைகை வரி வசூல் செய்தும், காங்கிரஸ்காரர்களுடைய குடும்பங்களைத் தவிர மற்றவர்களின் வாழ்க்கையில் ஏன் நிம்மதி ஏற்படவில்லை ?"

"சுதந்திர அரசாங்கம் தன்னுடைய பட்டுக் குடையின் கீழ் ஒண்டிக் கிடக்கும் பிரஜைகளுக்கு செய்த உதவிகள் என்ன ?"

"வாழ்க்கைச் செலவின் புள்ளி விவரங்கள் ஏன் உயர்ந்தன ?"

"சுதந்திரம் கிடைத்தால்—அந்நியன் கப்பல் ஏறிவிட்டால்—இந்தியத் துணைக்கண்டத்தின் குடிசைகளெல்லாம் மாளிகைகளாக மாறிவிடும்; பசி பறக்கும்; வறுமை இறக்கும், என்று முழக்கமிட்ட வீர உரைகள் நடைமுறைக்குப் பயன்படாமல் போனது ஏன் ?"

—என்று கடந்த நான்காண்டு காலமாக காங்கிரஸ் பேரியக்கத்தின் பால் மோதிய கணைகள் இன்று அந்த இயக்கத்தை அலப்பி இருக்கின்றன.

காற்றின் அசைவில் வயதாகிப் போன மரங்களின் ஆணிவேர் ஆடுவதைப் போல் காங்கிரசின் அஸ்திவாரம் ஆட்டம் கண்டிருக்கிறது. தியாகத்தின் பேராலும், சிறைவாழ்க்கையின் பேராலும் மக்களை அமைதிப்படுத்தி வந்த சாந்த உரைகள் இன்றைக்கு நாட்டிலே விலைபோகவில்லை. வெள்ளையனை விரட்டுகின்ற பெரும் பணியில் ஈடுபட்டதற்காக, நாட்டின் சுபீட்சத்தைக் குலைக்கும் அதர்மச் செயலை மக்கள் ஏற்று அதற்குச் சிரம்பணிந்த காலம் மறைந்துவிட்டது. எதற்கும், 'ஏன் ? எப்படி ?' என்ற கேள்விகள் தலையெடுக்கத் தொடங்கிவிட்டன. எட்டுத் திக்கிலும் வேட்டு முழக்கம் கேட்பது போல் எதிர்க்கட்சிக்காரர்களின் விளக்க உரைகள் முரசொலிக்க ஆரம்பித்து விட்டன. இந்தியாவின் தென்பகுதியிலே மட்டுமல்ல, வடநாட்டுப் பணிமலையின் அடிவாரம் வரையில் பகைப்புலம் வளர்ந்து கூடாரமடிக்கத் தொடங்கி இருக்கிறது. இதை உணர்ந்த காங்கிரஸ் அரசியலார் குறைந்த மூலதனத்தில் நிறைய லாபம் சம்பாதிக்கும் புதிய மார்க்கத்தை கண்டுபிடிக்க முனைந்தார்கள். 'என்ன செய்தீர்கள் ?' என்று கேட்போர்க்குப் பதில் தரவும், காங்கிரசின் சாதனைப் பட்டியலின் எண்ணிக்கையை உயர்த்தவும், இந்தியா முழுவதும் ஒரு திட்டத்தை அமல் செய்யத் தொடங்கியிருக்கிறார்கள். சமுதாய அபிவிருத்தித் திட்டமென்று அது வழங்கப்படுகிறது. மத்திய சர்க்காருடைய மான்யத்தின் பேராலும், மாநில சர்க்காரின் உதவியின் பேராலும் அந்தத் திட்டம் அமல் செய்யப்படுவதாகவும் சொல்லப்படுகிறது. டெல்லியினுடைய மூளையில் உருவாக்கப்பட்ட திட்டங்கள் இங்கே இறக்குமதி செய்யப்பட்டு, தென்னாட்டின் கிராமங்களில் புகுத்தப்படுகின்றன. 17,400 கிராமங்கள் கொண்ட நமது சென்னை மாநிலத்தில், 357 சமுதாய அபிவிருத்திப் பகுதிகளை (Block-Development) உருவாக்க சர்க்கார் திட்டமிட்டிருக்கிறது. இதுவரை 173 பகுதிகள் பிரிக்கப்பட்டு செயலாற்றி வருகின்றன. 9300 கிராமங்கள் இந்தத் திட்டத்தினால் பயன் பெறுவதாகச் சொல்லப்படுகிறது. சென்னை மாநிலத்தின் முதலமைச்சர் காமராசர் அவர்கள் இந்த இலாக்காவின் பொறுப்பை ஏற்றிருக்கிறார். குறைந்த புத்திசாலித்தனத்தை வைத்துக் கொண்டு அதிகப்படியான அனுகூலத்தைப் பெற்றுச் சுவை கண்ட காமராசர், இதிலே பெருநஷ்டமடைந்தது பரிதாபத்துக்குரிய முடிவாகும். அரசியல் ரீதியிலும், விஞ்ஞான ரீதியிலும், அவர் ஏற்றுக்கொண்டிருக்கும் இந்தப் பணியில் அவர் மீளமுடியாத வீழ்ச்சியை அடைந்திருப்பதை, தமிழகம் அவருக்கு உணர்த்தத் தலைப்பட்டுவிட்டது. பொதுமக்களுடைய கோபத்திற்கும், கண்டனத்திற்கும் ஆளாகாமல் தப்பித்துவிட எண்ணித் தன் வசமிருந்த போலீஸ் இலாக்காவை தியாக சிந்தனையாலோ, அல்லது சதித்திட்டத்தாலோ பக்தவத்சலத்திடம் ஒப்புவித்துவிட்ட காமராசர் சமுதாய அபிவிருத்தித் திட்டத்தை ஏற்றுக்கொண்டதின் பயனாக, கற்றவர்கள் முதல் மற்றவர்கள் ஈறாக அனைவருடைய வெறுப்புக்கும் ஆளாகிவிட்டார். நரி பிடிக்கப் போனவன் புலியிடம் சிக்கிக்கொண்டது போல் காங்கிரசிற்கு பெயர் சம்பாதிக்க முயன்ற முதல்வர், அந்த இயக்கத்திற்கும், தனக்கும் நல்ல எதிர்காலம் இல்லை என்பதை உணர்ந்து கொண்டார்.

★

தென் மாவட்டங்களிலே உருவாக்கப்பட்டிருக்கும் சமுதாய அபிவிருத்திப் பகுதிகளைக் கண்டு பத்திரிகைகளிலே புகழ்ந்து எழுதுவதற்கு அண்மையில் தமிழகத்தின் புகழ்பெற்ற பத்திரிக்கைகளின் நிருபர்கள் ஊர் ஊராக அழைத்துச் செல்லப்பட்டார்கள். ஆங்காங்கே முகாமிட்டு, பத்து நாட்களுக்குப் பிறகு சர்க்கார் அவர்களை விடுவித்திருக்கிறது. தமிழகத்தில் கீர்த்தியோடும், செல்வாக்கோடும் விளங்கும் வார இதழ்களின் நிருபர்களும், தின இதழ்களின் நிருபர்களும் அந்தப் பத்து நாள் சுற்றுப்பயணத்தில் பங்கு பெற்றிருந்தார்கள். மதுரை, இராமனாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி, ஆகிய மாவட்டங்களில் செயலாற்றி வரும் சமுதாய அபிவிருத்தித் திட்டப் பகுதிகளை நிருபர்கள் நேரில் கண்டார்கள். அவர்கள் அனைவரும் எந்தக் காரியத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்களோ அதை மறந்தோ அல்லது அது அவசியமற்றது என்று தள்ளியோ கண்டு வந்த திட்டங்களைப்பற்றி குறைவாகவும், ஆங்காங்கு தென்பட்ட ஆலயங்களைபற்றியே அதிகமாகவும் எழுதியிருக்கிறார்கள். "மதுரையிலே சோமசுந்தரக் கடவுளைச் சந்தித்தோம்; டி.வி.எஸ்.தொழிற்சாலையைக் கண்டோம்; பெட்ரோலுக்குப் பதிலாக டீசல் எண்ணெயை உபயோகிக்கலாமா என்ற பிரச்சனையை முடிவு கண்டோம்; காந்தி கிராமத்தில் வி. வி. சடகோபன் நடத்திய பஜனை நன்றாக இருந்தது; திருப்பாவை திருவெம்பாவை இசைத் தட்டுகள் கதிரொளிக்கு முன்னால் இசை ஒலி எழுப்பும் இனிமையை சுற்றுப் பயணம் முழுதும் அனுபவித்தோம்"-என்று ஒவ்வொருவரும் அவரவர்களின் சொந்த விவகாரம்பற்றி எழுதியிருக்கிறார்களேதவிர, அபிலாஷைகளைத் தெரிவித்திருக்கின்றார்களே தவிர, திட்டத்தின் எதிர்காலத்தைப் பற்றிக் குறிப்பிடவில்லை.

'கல்கி' நிருபர் இந்தச் சமுதாய நலத் திட்டம் நலமாகவும், நேர்மையாகவும் நடைபெற ஆண்டவன்தான் அருள்புரிய வேண்டுமென்று முடித்திருக்கிறார். ஒரு தின இதழின் நிருபர் இந்தச் சமுதாய அபிவிருத்தித் திட்டம் பாலில்லாமல் குழந்தை வளர்க்க நினைக்கும் ஏமாற்று வித்தை என்று குறிப்பிட்டிருக்கிறது. 'ஆனந்த விகடன்' 'தெற்கு வளர்கிறது' என்று தலைப்பிட்டு, கடந்த சில வாரங்களாக சர்க்காரின் இந்தக் குழப்படி வேலையை கிண்டல் செய்து வருகிறது. திட்டத்தின் பொறுப்பாளர்கள் எதை மனதில் கொண்டு நிருபர்களை அழைத்துச் சென்றார்களோ அது நிறைவேறவில்லை. அதற்கு மாறாக அவர்கள் முகத்திலே கரி பூசிவிட்டார்கள் நிருபர்கள்.

சமுதாய அபிவிருத்தித் திட்டத்தினுடைய வேலைப்பாடுகளையும் அதற்காக நியமிக்கப்பட்டிருக்கும் அதிகாரிகளின் பட்டியலையும்' பார்த்தால் இது ஒரு குட்டி சர்க்காராமவே புலப்படுகிறது. பி. டி. ஒ. என்கிறார்கள். எ. பி., டி. ஒ. என்கிறார்கள், ஆர். சி. ஒ., எஸ். இ. ஒ. என்கிறார்கள். 'ஒ' என்று பெயர் வந்துவிட்டால் 'ஆபீசர்' என்று பொருள். வெள்ளைக்காரன் காலத்தில் காக்கிச் சட்டையைப் பார்த்தால், சிவப்புத் தொப்பியைக் கண்டால், பாமர மக்கள் நடுங்கினார்கள். வெள்ளைக்காரன் போய் இந்தக் கொள்ளைக்காரர்கள் வந்த பிறகு தபால்காரர் முதல் தாசில்தார்வரையில் உள்ள அனைவரும் பாமர மக்களுக்குப் பூச்சாண்டிகளாக மாறிவிட்டார்கள். இதுவும் போதாதென்று இந்த ஆபீசர், அந்த ஆபீசர் என்று போட்டு ஒன்றுமறியாத ஏழைகளை இந்தச் சமுதாய அபிவிருத்தித் திட்டம உயிரை வாங்குகிறது.

சமுதாய அபிவிருத்தித்' திட்டம் செயல்படும் பகுதிகளில் 'ஜீப்' காரைக் கண்டால் ஒவ்வொரு ஏழையினுடைய இருதயமும் 'பகீர் பகீர்' என்று அடித்துக்கொள்கிறது. கடன் பட்டவர்களைப்போல் அவர்கள் கண்ணீர் வடிக்கிறார்கள். ஆம்! பலவந்தமாகத் திணித்த பணத்தை மிரட்டிக் கட்டாயமாக வசூலிப்பதற்குத்தானே இன்று 'ஜீப்'கார்கள் போய்க்கொண்டிருக்கின்றன! எந்த அதிகாரிகளைக்' கொண்டு கடன் கொடுத்தார்களோ, அந்த அதிகாரிகளைக் கொண்டு காங்கிரஸ் கட்சிக்குப் பயப்படும்படியும், அதற்கு வாக்களிக்கும்படியும் நிர்ப்பந்தம் செய்வதற்குத்தான் இந்த இலாக்கா உருவாக்கப்பட்டது என்று நாம் சர்க்கார்மீது பகிரங்கமாகக் குற்றம் சாட்டலாம். ஐந்துருபாய் நோட்டைக் காண்பித்து இதுதான் பத்து ரூபாய் என்று கிராம மக்களை ஏமாற்றும் தபால்காரர்கள் இன்னும் ஒழியவில்லை. பொய்ச்சாட்சி சொல்ல வரவில்லையானால் போடுவேன் சிறைக்குள் என்னும் போலீசாரின் ரௌடித்தனம் கிராமங்களில் ஒடுங்கவில்லை. குறித்த நேரத்திலே வரி கட்டினாலும் கைக்கூலி பெற்றுக்கொண்டால் தான் முறிச்சீட்டுத் தருவேன் என்று ஆணவமாகப் பதில் பேசும் கிராம அதிகாரிகளின் பிச்சைக்காரப் புத்தி இன்னும் அடங்கவில்லை. இத்தனை தொல்லைகளுக்கிடையே அவதிப்படும் கிராமங்களுக்குள் மற்றொரு புதிய இலாக்காவைப் புகுத்தி, பத்துப் பதினைந்து முரட்டு ஆபீசர்களையும் புகுத்தினால் கிராம மக்களின் இருதயங்கள் என்ன ஆகுமென்று யாரால் சொல்லமுடியும்?

எஸ். எஸ். தென்னரசு

— அடுத்த இதழில் முடியும் —

மணககோலம் கலையாத மறுநொடியில் கணவன்
மாரடைப்பால் மடிந்துவிட்டான் என்றநிலை கேட்டு
மணப்பெண்ணின் வண்டுவிழி நீர்சுரப்ப தைப்போல்
வானழுது நீர்வடிக்கும் எழிலந்தி நேரம்.
சிலைவடிக்கும் கலைப்பணியை ஒருபுறத்தே ஒதுக்கி
சிறுபொழுது காற்ருட நடந்துசென்ற எந்தன்
தலையெங்கும உடலெங்கும் புனல்வழிந்து கொட்ட
சாலையோரம் நின்றிருந்த கோவிலுக்குச் சென்றேன்.

அங்கிருந்த சிலையெல்லாம் நான்வடித்த சிலைகள்
ஆனாலும் இன்றவைகள் எனைப்பார்க்க வில்லை
மங்கியதோர் ஒளியினிலே முகம்திருப்பி எங்கோ
மழைவானைப் பார்த்திருந்த நிலைதனைக் கண்டேன்.
அன்ரெருநாள் வீதிவழி சென்றவரின் காலில்
அடிபட்டு மிதிபட்டு கிடந்தகருங் கல்லை
நன்ருக நீராட்டிச் சிலையாகச் செய்து
நாலுவெள்ளிக் காசுக்கு விலையாகத் தந்தேன்.

கோவிலுக்கு வந்தவுடன் எனைமறந்து விட்டு
கொலுவீற்றி ருந்ததனை எண்ணிமனம் நொந்தேன்
ஆவியினைத் துச்சமென்று மதித்தவனுக் காக
ஆலயத்துக் கற்சிலைகள் நீர்வடிக்க விலையே!
இவ்வாறு நான்எண்ணி நின்றிருந்த நேரம்
இருதுளிநீர் ஒருசிலையின் கண்களிலே கண்டேன்
சவ்வாது மணம்வீசும் சிலையருகில் செல்லத்
தடையாகக் கதவொன்று நின்றிருந்த தாங்கே.

கம்பிகளுக் கருகினிலே விரைந்தோடிச் சென்று
கண்களிலே நீர்கொணர்ந்த கற்சிலையைப் பார்த்தேன்
வெம்பிப்போய் விழுந்தசிறு மாவடுவைப் போல
முகக்குறிப்பைச் சிறிதாக்கி எனைநோக்கி யதுவே.
"எனைனிலைக் நீயிரங்கி புனல்வடிக்கும சிலையே!
எழில்மாடக் கோவிலிலே உனைச்சேர்த்த பெருமை
என்கரத்திற் குரித்தாகும்; நீஉணர்ந்து கொண்டாய்
என்சொல்வேன்? மற்றெவரும் உணரவில்லை யந்தோ!

பாலுக்கும் பழத்திற்கும் பஞ்சமின்றி வாழும்
பளிங்குருவே உனவாழ்வு பகட்டான வாழ்வு
தோலபோர்த்த, துணியின்றி உணவின்றி வாடும்
துரும்பொதத எனவாழ்வும வாழ்வாநீ பகர்வாய்.
வெயிலுக்கும் பெருமழைக்கும் மறைந்திருந்து வாழ
வீடில்லை கூடில்லை ஒருமறைவு மில்லை
துயிலாத உனமேனி தங்கிநடம் புரிய
சிலையேஇப் பெருங்கோயில் உனபேறு என்னே!"

புனல்வடித்த சிலையெந்தன் திருமொழியைக் கேட்டுப்
பொலிவிழந்த வாய்திறந்து மறுமொழிபே சிற்று
அனல்க்கும உன்மொழியைச் செவிமடுததேன் அன்பா!
அவனியிலே உன்வாழ்வு பெருவாழ்வே யாகும்.
இரவென்றும் பகலென்றும் பாராமல் இந்த
இருள்சூழ்ந்த சிறைக்கோட்ட நரகத்திற் குள்ளே
கரமதொங்க கால்வலிக்க ஒருமேடை மீது
காலமெலாம் வாழ்கினறேன். இதுதானு வாழ்வு?

கோவிலிலே குடிபுகுந்த நாள்முதலாய் எனக்குக்
களிப்பிலலை சுகமிலலை கலையின்பம் இல்லை
ஆவியற்ற பிணமபோல அடைபட்டுக் கிடக்கும்
அடியேனை விடுவிக்கும் வழியேதும் இலையோ?"
கற்சிலையின் கதைகேட்டு மனமவருந்தி நானும்
கார்சூழ்ந்த வானத்தை நெடுநேரம பார்த்தேன்
கற்களினைக் குவித்ததைப்போல் கார்மேகம் வானில்
குவிந்திருக்கக் கணடேன்பின் கடுகிவழி நடந்தேன்.

துறையூர் ந. அலி ★

நாவல் கறுப்பாய் இருப்பதால்

— 1-ம் பக்கத் தொடர்ச்சி —

தோழர்கள் தங்களது போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தினர். அதிக தூரம் உள்ள அலுவலகங்களுக்கும் மற்ற இடங்களுக்கும் போகவேண்டிய நீக்ரோ மக்கள், நடந்து போவதில் சிறுதுன்பம் இருக்கிறது என்பதை உணர்ந்தனர். என்ருலும் அவர்களது தன்மான உணர்ச்சி, போராட்டத்தை வெற்றிகரமாக முடிப்பதில் கண்ணும் கருத்துமாயிருந்தது. என்ருலும் அவர்களுக்கு உதவி செய்யும் பொருட்டு டாக்டர் கிங் தன்னுடைய நண்பர்களின்மூலம் 300 கார்கள் பெற்று அவைகளின் மூலம் அதிக தூரம் செல்பவர்கள் தங்கள் இடத்தை அடைவதற்கு ஏற்பாடு செய்தார். ஒருநாள்-இரு கர்கள் உள்ள ஆப்பிரிக்காவின் அரசியல் அதிகாரம் 10 சத விதம் உள்ள வெள்ளையர்களின் கையில் இருக்கிறது. ஆப்பிரிக்காவில்உள்ள கறுப்பர்களின் உரிமையைப் பெற அவர்களையும் மனிதர்களாக நடத்தத் தூண்டிவிடுகிருர் என்று சொல்லி டாக்டர் ஹேஸ்டிங்கல் பண்டாவை வெள்ளை பிரிட்டன் அரசாங்கம் கைது செய்தது. உரிமை கேட்பவர்களையும் விடுதலை விரும்பிகளையும் சிறையிலேஅடைப்பதன் மூலம் அடக்கிவிடலாம் என்று பிரிட்டன் நினைப்பதை எண்ணும்பொழுது, வியப்பு ஏற்படுகிறது. சமீபத்தில் விடுதலையான சைப்ரஸ் நாட்டின் தலைவர் மக்காரியாஸ் போன்ற விடுதலை விரும்பிகள்கூட ஒரு காலத்தில் சிறைப்

நாவிற்குச் சுவைக்காதோ?

நாளல்ல, 12 மாதங்கள் நீக்ரோக்கள் வெள்ளை பஸ் முதலாளிகளின் கார்களில் ஏருமல் நடந்தே தங்கள் இடத்திற்கு சென்றனர். ஒரு ஆண்டு காலமாக பஸ்ஸில் ஏறுவதைக் கைவிட்டனர். ஒரு ஆண்டிற்குப் பிறகு அதாவது 1956-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 21-ந் தேதி சுப்ரீம் கோர்ட்டு, "பஸ்களில் நிற பேதம் காட்டுவது அமெரிக்க அரசியல் சட்டத்திற்கே விரோதமானது; புறம்பானது" என்று தீர்ப்புக் கூறியது. அமெரிக்க அரசியல் சட்டத்தை மீறி நடக்கிருர்கள் அமெரிக்க வெள்ளை பஸ் முதலாளிகள் எனவும் அந்த நீதிமன்றம் குற்றம் சாட்டியது. போராட்டம் வெற்றிபெற்றது. சட்டத்தின் துணைகொண்டு போராட்டத்தை நசுக்க முயன்ற வெள்ளையர்கள் தோல்வி படுத்தப்பட்டனர். ஆனல் இன்று... ஆகவே வெள்ளையர்கள் புத்திசாலித்தனமாக நடந்துகொள்வார்கள் ஆப்ரிக்கா விஷயத்தில் என உலகமே எதிர்பார்க்கிறது. 100க்கு 90 விதம் வாழ்கிற ஆப்ரிக்கர்கள் தங்கள் நாட்டை ஆளுவதற்கு உரிமை வழங்கப்படுவார்களா? பிரிட்டன் இந்த நியாயமான கோரிக்கையை, உரிமையை உணர்ந்து புத்திசாலித்தனமாக நடந்துகொள்ளுமா என உலகமே எதிர்பார்க்கிறது. அமெரிக்க நீக்ரோக்களின் தலைவர் டாக்டர் கிங் அவர்களது உழைப்பு பெருமளவு இல்லாவிட்டாலும் ஓரளவு வெற்றியைத் தந்திருக்கிறது. அதேபோல் ஆப்பிரிக்கர்களும் தங்கள் உரி

நாட்டிற்கு உதவாதோ?

கண்டனர். அமைதியான முறையிலும் நேர்மையான முறையிலும் நடந்த அந்த மாபெரும் போராட்டத்தின் வெற்றிக்கு டாக்டர் கிங் அவர்களின் முயற்சியே காரணம். வேதனையும் வெறுப்பும் விரக்தியும், வெள்ளையர்களை வெறியர்களாக்கியது. பலாத்காரத்தை உபயோகித்து டாக்டர் கிங்கை வீழ்த்திவிட முயன்றனர். டாக்டர் மார்ட்டின் லூதர் கிங் அவர்களின் வீட்டை எரிக்கவும், வெடிகுண்டு வைத்துத் தகர்த்துஎறியவும், அவரைக் கொலை செய்யவும் நிறவெறியர்கள் முயன்று தோல்வியே கண்டனர்.

நாகரிகம் முற்றுப்பெற்ற நூற்ருண்டில் இன்னும் இந்த நிறபேதம்-நிறவெறி ஒழிந்த பாடில்லை. ஆப்ரிக்காவில் ஏற்படுகிற கொந்தளிப்புக்களுக்கும் கலகங்களுக்கும் இந்த வெள்ளையரின் நிறவெறிப் போக்கே காரணம். 90 சத விதம் ஆப்பிரிக் மையை டாக்டர் பண்டாவின் தளரா முயற்சியாலும் ஊக்கத்தாலும் பெறுவார்கள் என உலகில் உள்ள விடுதலை விரும்பிகள் வாழ்த்துகிருர்கள். அந்த நாள் வருமா?

—ஜோசப் பெஸ்கி பி. ஏ.

மறைவு

தோழர் ப. புகழேந்தி அவர்களின் தாய்மாமனும் பிரபல வணிகரும் ஆன திரு. பெ. பாலசுப்பிரமணியம் அவர்கள், நெல்லைமாவட்டம் கடையநல்லூரில், தமது இல்லத்தில் 7-3-'59 காலை இயற்கை எய்தினர்கள் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

— 2 ம் பக்கத் தொடர்ச்சி —

நிர்மலமான நீலவானத்திலே மின்னி மறையும் மின்னலென அந்த சன்னலில் தோன்றி மறைந்த முகம், ஆகா, எத்துணை அழகாக இருந்தது. மறக்க முடியாத அளவு என் மனதில் பதிந்துவிட்ட அந்த முகம் எப்படியிருந்தது என்று வியந்த வண்ணமிருந்த எனக்கு அந்த முகத்தில் ஏதோ துயரத்தின் சாயல் இருந்ததாகத் தெரிந்தது. எப்படி "கெட்ட பழக்கங்கள்" கைக்கொண்டிருந்தவர்களின் கண்களைச் சுற்றிக் கருவளையங்கள் போட்டிருக்கின்றனவோ, அப்படி அவள் மெழுகு முகத்திலே மென்மையாகத் துயரத்தின் சாயல் படிந்திருப்பது தெரிந்தது. ஏன் அவள் பூர்ணசந்திரவதனத்தில் சலியாத சஞ்சலம் புகுந்தது என்று சிந்தித்துக் கொண்டிருந்தேன்.

இப்படியே இரவு முழுதும் என் மனம், தளிர்க்கொடி பற்றிய சிந்தனையில் சிக்கியிருந்தது. எப்படியோ என் கண்களைத் துயில் ஆட்கொண்டது. அப்படியே உறங்கிவிட்டிருக்கிறேன்.

காலையில் எட்டு மணிக்கு மேலிருக்கும். என் நண்பன் வந்து என்னை எழுப்பினான்.

"என்னப்பா எட்டு மணி வரை தூங்குகிறாய்? இரவு என்ன தூக்கம் நன்றாக வந்ததா? இப்படியேதான் நீ இரவுவரை விழித்திருந்து பகல் வெகுநேரம் உறங்குவதா? நல்ல பழக்கமப்பா!" என்று மடமடவென்று பேசிக்கொண்டே போனான்.

"நிறுத்து தோழா...என்ன உன் பாட்டுக்கு கேள்விகளை அடுக்கிக் கொண்டே போகிறாயே?" என்று அவனை மடக்கினேன். பின் தொடர்ந்து "இரவு வெகு நேரம் வரை உறக்கம் வராமல் புரண்டு கொண்டிருந்தேன். புது இடமில்லையா? அதுதான் போலும்" என்றேன்.

"சீக்கிரம் எழுந்து குளித்துவிட்டு, காபி அருந்து. வெளியே போகலாம்" என்றான்.

"ஏன் இன்று நீ வேலைக்குப் போகவில்லையா?" என்று வினவினேன்.

"இல்லையப்பா. ஒரு வாரத்திற்கு விடுமுறை போட்டிருக்கிறேன். சீக்கிரம் கிளம்பு" என்றான்.

நானும் எழுந்தேன்.

அன்று வெளியே சென்றுவிட்டு வர வெகு நேரமாகிவிட்டது. வந்ததும் உணவு உண்டுவிட்டுப் படுத்தோம். எனக்கு நடுப்பகல் வேளையில் உறங்கி பழக்கமில்லாததால் படுத்துக்கொண்டு புத்தகம் படித்துக்கொண்டிருந்தேன்.

படித்துக்கொண்டிருந்தேனே தவிர என் மனம் புத்தகத்தில் படியவில்லை. கண்கள் கறுப்பு எழுத்துக்களைக் கவனித்துக்கொண்டிருக்கின்றனவென்றாலும் கருத்து மற்றொன்றின் மீது இருந்தது. ஆம். சன்னலில் தெரிந்த அந்த முகத்தையே சுற்றிச் சுற்றி வட்டமிட்டுக்கொண்டிருந்தது எண்ணம்.

எழுத்திலே கருத்துச் செலுத்தாமல் படித்துக்கொண்டிருப்பதில் பயனில்லை என்று புத்தகத்தை மூடி வைத்துவிட்டு சன்னலருகில் சென்றேன். பாதையைத்தான் பார்க்க முயன்றேன். என்றாலும் என் கண்கள் எதிர் வீட்டு சன்னலையே நோக்கின.

ஆகா! இதோ மறுபடியும் அந்த முகம் இப்பொழுது தன் முகத்தை சரேலென்று இழுத்துக்கொள்ளாமல் அங்கேயே தென்படுகிறதே.

சன்னலுக்குச் சற்றுத் தொலைவிலிருந்த அந்த முகம் சன்னலுக்கருகில் வந்தது. 'அஜந்தா' ஓவியம் என்பார்களே அது இந்த அழகு முகத்திடம் 'பிச்சை' வாங்க வேண்டும்.

நெளி நெளியாகச் சுருளும் கூந்தல் ஒன்றிரண்டு கேசங்கள் அவள் பிறைநிலா நெற்றியில் கறைபோன்று அல்ல, 'கலை'போன்று விளையாடிக் கொண்டிருந்தன. வட்ட வடிவான முகம்; பால்போன்ற தூய வெண்ணிறம். கவர்ச்சி மிகுந்த கண்கள் கருவண்டுகள் போன்று சுழன்றன.

அந்தப் பார்வையின் சக்தியை என்னால் தாளமுடியவில்லை. ஆனாலும் பெண்ணின் பார்வைக்கு நாம் பின்னடைவதா என்று சமாளித்துக் கொண்டு கண் கொட்டாமல் நான் பார்த்தேன்.

அவள் கண் பார்வை தாழ்ந்தது, முகம் திரும்பியது, உள்ளே போய் விட்டாள். ஆனால், நான் அங்கிருந்து அகலவில்லை.

சிறிதுநேரம் பொறுத்து மறுபடியும் அவள் வந்தாள். முன்போல் சன்னலருகில் வந்தாள். நானும் பார்த்தேன். இப்படி பார்க்கும் படலம் சிறிதுநேரம் தொடர்ந்தது. அதற்குள் அவள் இருந்த அறையில் யாரோ வந்தார்கள் போலிருக்கிறது. அவள் போய்விட்டாள். நான் நெடுநேரம் நின்று பார்த்தேன். வரவில்லை. சோர்ந்துபோய் படுக்கையில் சாய்ந்தேன். அலுப்பில் சற்று கண்ணயர்ந்தேன்.

என் பெயரைக் கூறி யாரோ அழைப்பதைக் கேட்டுக் கண்விழித்தேன்.

எதிரே நாகன் நின்றிருந்தான்.

"என்னப்பா மணி ஐந்து ஆகிறது. இன்னும் தூங்குகிறாயே? எழுந்திரு." என்றான்.

அப்பொழுதான் எனக்கு நினைவு வந்தது. எழுந்தேன்.

ஏறக்குறைய ஒரு கிழமைக்காலம் என் எதிர்வீட்டுக் 'கண் உறவு' நீடித்தது. அன்று வீட்டில் பெண் பேச்சுக்குரல் கேட்கவே யாராக இருக்கும் என்று எட்டிப்பார்த்தேன், என் அறையினின்று.

கூடத்தில் கமலா யாரோ ஒரு பெண் இடம் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தாள்.

என் தலையைக் கண்டதும் கமலா "என்னண்ணா, என்ன வேண்டும்?" என்றாள்.

"ஒன்றுமில்லை. தண்ணீர் வேண்டும்" என்று தடுமாறினேன்.

என் பேச்சுக் கேட்டு அவள் திரும்பினாள். அவள் எதிர்வீட்டு ஏந்திழைதான்.

அதற்குள் கமலா எழுந்து சென்றாள், நீர் கொண்டுவர.

அந்த அருமையான சந்தர்ப்பத்தை நழுவவிட நான் விரும்பவில்லை. வெளியே வந்தேன். அருகில் சென்றேன். அவள் தலைகுனிந்தாள்.

"உங்களிடம் பேச விரும்புகிறேன். எங்கு சந்திக்கலாம்?" என்றேன். இந்த ஒரு வாக்கியம் பேசுவதற்குள் எனக்கு வியர்த்துவிட்டது, உடல் இலேசாக ஒடுங்கியது, நெஞ்சு வேகமாக அடித்துக் கொண்டது.

அவள் பேசாமல் இருந்தாள்.

"நீங்கள் விரும்பாவிட்டால் பரவாயில்லை" என்றேன். அவள் பேசத் திண்டாடினாள். உடல் ஆடிற்று. "உங்களுக்கு விருப்பமானால் மாலை, பூங்காவில் சந்திக்கலாம்" என்றேன்.

"ஆகட்டும்" என்பதற்கு அறிகுறியாகத் தலையாட்டினாள். அப்பா, பேச எத்துணை வெட்கம்!

கமலா நீருடன் வந்தாள்.

"என்ன அண்ணா, யார் இது என்று பார்க்கிறீர்கள். இது எதிர் வீட்டு பெண். பெயர் ரமணி" என்றாள் கமலா.

"அப்படியா! சரி" என்றேன்.

தண்ணீரை வாங்கிக் குடித்தேன்.

அதிக நேரம் அங்கு நின்றாலோ, அல்லது அநாவசியமாக பேசிக் கொண்டிருந்தாலோ கமலாவிற்குச் சந்தேகம் ஏதேனும் வந்துவிடும் என்று என் அறைக்குப் போய்விட்டேன்.

காதல்! உம், அந்த வார்த்தையிலே என்ன கொள்ளை இன்பம் இழைந்திருக்கிறது? காதலிக்கும் பெண்ணை நினைத்தாலே போதும்—நெஞ்சு எவ்வளவு இனிக்கிறது. சும்மாவா சொன்னார் செந்நாப்புலவர் திருவள்ளுவர் "உள்ளக் களித்தலுங் காண மகிழ்தலுங் கள்ளுக்கில் காமத்திற்குண்டு" என்று நினைத்த அளவிலே நெஞ்சு நிறையும்; மகிழ்ச்சி துள்ளும்; பார்த்த அளவிலே பரவசம்ஏற்படும். இன்பம் பாடும்! இத்தகைய தன்மை கள்ளுக்கு இல்லை. ஆனால், காமத்திற்குஉண்டு. மது அருந்தினால்தான் மயக்கம் ஏற்படும். ஆனால், காமம்...!

எனக்கு காதல் உணர்ச்சி ஊட்டிய அவளை—ரமணியை நினைத்தேன். நினைத்தவுடன் அவள் சுந்தரமுகம், சொகுசான விழிவீச்சு இவை வந்தன. அந்த ஆனந்த மயக்கத்திலே கிடந்தேன்.

மயக்கந் தெளிந்து எழுந்ததும் மணியைப் பார்த்தேன். ஆறு ஆகிவிட்டிருந்தது. உடை மாற்றிக்கொண்டு, தனியாக உலாவிவிட்டு வருவதாகக் கூறிவிட்டுக் கிளம்பினேன்.

மலர்த் தோட்டத்திலே மங்கையைக் கண்டேன்.

போகும்போது வழியில் பொல்லாத மனம் படபடவென்று அடித்துக் கொண்டது... ஆனந்தமும் அதே நேரத்தில் அச்சமும் மனதில் போட்டி போட்டன.

அவளைக் கண்டதும் அதே நிலைதான். உடல் வியர்க்க, கை கால் ஆட, மனம் வேகமாக அடித்துக் கொள்ள, இரத்தம் 'சூடேற' அவள் அருகில் தடுமாறிக்கொண்டே சென்றேன்.

"வந்துவிட்டாயா...விட்டீர்களா?" என்று தடுமாறிக்கொண்டு பேசினேன்.

அவள் சற்றே தன் இதழைத் திறந்தாள். முல்லைகள் ஒளி வீசின. ஆனால், வெட்கம் கொத்தியது போலும். "வாருங்கள்!" என்று ஒரு வார்த்தைகூடக் கேட்கவில்லை. நானும் அதைப் பொருட்படுத்தவில்லை. இதழ் திறந்து பேசினால்தானா, இதயத்து அன்பு வெளிப்படும்? பார்வை, பாசம் பொங்கும் விழி அசைவு, இதயத்துடிப்பு ஆகியவற்றின் ஓராயிரம் மர்ம மொழிகளுக்குமுன், அதரம் அசைத்துச் சொல்லும் ஓர் சொல்லா பெரிது? விழிமொழியிலே மயங்கி நான் அவளை அமரச் செய்தேன்.

"என்மீது உனக்கு......அன்புதானே?"

எந்தப் பதிலைச் சொல்வாள்? நெஞ்சை உதட்டின் அசைவிலே தானா காணமுடியும்? அன்பில்லாமலா அவள் இங்கே வந்தாள்! மிகுந்த வெட்கக்காரி. பேசமுடியாது திண்டாடுகிறாள். ஆயிரம் ஆயிரம் கதைகள் பேசும் அந்த மாடப்புறாக்களும், அசைந்து தழுவி ரகசியம் பேசிக்கொள்ளும் செடி கொடிக் கிளைகளும், உருண்டோடும் காலத்தைப் பாடிச் செல்லும் சிற்றோடையும், "காதல்! காதல்" என்றே பேசுகின்றன. இனி அவள் வேறு ஏன் பேசவேண்டும்? பேசவே வேண்டாம்! அகம் முகத்தில் தெரிகிறது; காதல் பார்வையில் வழிகிறது.

"உன் ஒப்புதல் கிடைத்தால் போதும் கண்ணே! நான் எதையும் தாங்கிக்கொண்டு உன் கைத்தலம் பற்றிடுவேன். உன்னை மணப்பதால், என் தந்தை சொத்தைக் கொடுக்க மறுக்கலாம். ஊரார் என்னை ஒதுக்கி வைக்கலாம். இன்னும் பல ஏமாற்றங்கள் என்னைக் கொத்தலாம். ஆனாலும் நான் அஞ்சேன்; அயரேன்! எத்துணை ஏமாற்றங்கள் ஏற்படினும், கண்ணே உன் கைப்பற்றும் ஓர் ஆனந்த நிலையே போதும்! என்ன சொல்கிறாய், என் உயிரே?"

நான் தட்டுத்தடுமாறிப் பேசினேன். சிரித்து விளையாடிய அவள் முகத்தில் ஏனோ நான் பேசப் பேச சோகத்திரை விரிந்தது. ஏன்? ஏன்?

தன் உற்றார் உறவினரை விட்டுப் பிரிய அவள் அஞ்சுகிறாளா? முன் பின் தெரியாதவனோடு வாழ மயங்குகிறாளா? நான் அவளைக் கைவிட்டு விடும் கயவனுவேனோ எனக் கவலைப் படுகிறாளோ? ஏன்?

"பேசாத பொற்சித்திரமே! பேரழகின் திருக்கூத்தே! ஏன் அமைதியாய் இருக்கிறாய்? பேசு! பேசு! உன் பங்கயச் செவ்விதழ் திறந்து, பட்டுக்கன்னம் குழிவிழ, பேசு! பேசு! காதல் ஆறுகரை புரண்டோட, கன்னல் சாறு பெருக்கெடுத்தோட, உன் மணிமொழிகளைச் சிந்து! அன்பே, சிந்து!"

எனக்குக் காதல் பேசி அவ்வளவு பழக்கமில்லை. எனவே வாய்க்கு வந்ததை எல்லாம் பேசி முடித்ததும், அவள் கோவென்றழுது விட்டாள். கண்கள் அருவியாகிவிட்டன. ஏன்? ஏன்?

அவள் என் காலைத் தொட்டுக் கும்பிட்டுக்கொண்டே கையை ஆட்டி ஏதோ சொன்னாள். தன் தொண்டையையும் வாயையும் காட்டி ஏதோ, 'பே! பே!" என்றாள்.

அய்யோ, அவள்...?

எப்படி இந்த ஏமாற்றத்தைத் தாங்கிக்கொள்வேன்?

என் மனதில் கொத்துக் கொத்தாய்ப் பூத்த ஆசை மலர்கள் அத்தனையும் கருகிவிட்டனவே!

— இரா. மதனகோபால்
பி. காம.

4. அறுசீர் விருத்தம்.

அனல்கக்கும் இருவிழியும் அதிர்ந்தெழும்பும்
பெருங்குரலும் அஞ்சா நெஞ்சும்

முடிவு தேதி: 21-3-'59.

தென்றல் விருத்தப் போட்டி : : சென்னை - 6.

— 3-ம் பக்கத் தொடர்ச்சி —

இது மாவின் முழக்கம்.

"மாசேதுங் வான் சூய்!"

"மாசேதுங் ஆயிரம் ஆண்டுகள் வாழ்க!" என்பது, மக்களின் இந்த வாழ்த்தொலிக்குப் பொருள்.

1949-ம் ஆண்டில் ஆசியக் கண்டத்தில் எழுந்த அப்புது முழக்கம், உலகின் கவனத்தை எல்லாம் கவரத்தான் செய்தது. ஆனாலும் சீனா தன் தனிப் போக்கில் ஆட்சி அமைத்துக்கொள்ளவில்லை. இரஷ்ய சர்வாதிகாரியின் அடி வருடியாகவே கிடக்கிறது. "மாசேதுங், தனித்த சுய சிந்தனைக்காரர்; ஸ்டாலினானாலும் லெனினானாலும்-கருத்துத் தவறானால் கண்டிக்கத் தவறமாட்டார். தன் நாட்டின் தனியாட்சியில் தளரா ஆர்வம்கொண்டவர்!" என ஓர் ஆங்கிலேய எழுத்தாளன் கூறினானும். ஆனால் 9 ஆண்டுகளாக நடக்கும் நடையைக் கண்ட—ஆராய்ந்த—நமக்கு அப்படி ஒன்றும் படவில்லை.

★

டிட்டோவின் வாழ்க்கை நமக்குத் தெரியும், நன்கு. ஏழைக் கொல்லனின் மகனாகப் பிறந்த அவர் மன்னராட்சியில் மாண்டு கிடந்த தன் மண்ணை மீட்டிடும் பணியில் அயராது உழைத்தார். பலமுறை தலைமறைவு வாழ்க்கை நடத்தினார். இறுதியில் 1944-ல் தன் குறிக்கோளை அடைந்த இவர் யூகோவின் தலைவரானார். ஆட்சியைக் கைப்பற்றியதும் இரஷ்ய முறைகளை அப்படியே பரப்பினார். கூட்டுறவுப் பண்ணை, இரஷ்ய மாடல் தேர்தல், இரகசிய போலீஸ் ஆகிய அனைத்தையும் நடைமுறைக்குக் கொண்டு வந்தார். அவர் தன்னை ஒரு காலத்தில் போர்க் கைதியாக வைத்திருந்த இரஷ்யாவிடம் பொதுவுடைமைவாதி என்ற முறையில் அரசியலும் போரியலும் கற்றவர்தான்; விடுதலைப் போருக்கு அதன் உதவியைப் பெற்றவர்தான். இரஷ்யாவின் சர்வாதிகார ஆசைக்கு எதிராக நின்ற அமெரிக்காவின் பிரயாணிகள் விமானத்தைச் சுட்டிருக்கிறார். இரஷ்யக் கட்டளைப்படி கிரேக்கப் பொதுவுடைமையர் புரட்சி செய்தபோது தனது படையைத் தந்து உதவவும் செய்திருக்கிறார். எனினும்...**தனது அரசின் உள்நாட்டு வெளிநாட்டுக் கொள்கைகளை உருவாக்குவதில் கிரெம்ளின் மாளிகைச் சேவகனாய் இருக்க மறுத்துவிட்டார். "இரஷ்யா ஆயிரம் உதவிகள் செய்திருக்கலாம்; ஆயினும் அடிமை கொள்ள நினைக்கும் ஆதிக்கப் போக்கிற்கு இடம் கொடோம்! இடம் கொடோம்!" என்று முழங்கிவிட்டார்.**

தமது அனுபவத்தில் மாஸ்கோ மறையவர்கள் கண்ட முதலாவது தோல்வி இது.

மாவின் வாழ்க்கையும் சீனாவின் போக்கும் இதேபோன்றே இருப்பின் இக்கட்டுரைக்கே இடமில்லை.

★

இரஷ்யா விடுத்த அன்பழைப்பில் சிக்கிய நாடுகள் எளிதில் மீள முடிவதில்லை. ஒரு நாடு தன் வயப்பட்டதும் இரஷ்யா தன் சூழ்ச்சி வலையை மேலும் அகல விரிக்கிறது. அரசியல், கலைப் பண்பு வகை, படையமைப்பு ஆகிய அத்துணையிலும் அந்நாட்டைத் தன் அடிமைக் காடாக்குகிறது. பொதுவுடைமைப் போதையில், முதலில் இரஷ்யாவைத் தங்கள் தந்தையர் நாடாக ஏற்றவை, பின்னர் ஏதும் செய்ய முடிவதில்லை.

ஹங்கேரி எழுந்தது; எதிர்த்தது. குருதிச் சேற்றைப் பூசிக்கொண்டதுதான் மிச்சம்.

ஜார்ஜியா கொதித்தது. இரஷ்யா பூட்டிய அடிமைத் தளையை நொறுக்கிடத் துடித்தது; சோவியத்தை விட்டு வெளியேறப் போரிட்டது. ஆர்த்தெழுந்த விடுதலை விரும்பிகளின் தலைகள் கொய்யப்பட்டு, சர்வாதிகாரத் தோரணம் கட்டினர். இரஷ்யக் கொடுமை பொறுக்காது குமுறி வெடித்த கியூபன் கஸ்ஸாக்ஸ் மக்களும் துவைக்கப்பட்டனர். இந்தத் திருவிளையாடல்கள் அனைத்தையும் குறைவற நடத்திய கதாநாயகர், ஸ்டாலின் கைப்பாவையாயிருந்த பெரியா தான்.

ஹங்கேரியும் ஜார்ஜியாவும் சுடுகாடுகளானதை விழியெதிரே கண்ட சிலரும்கூட சீனா யூகோவின் வழியில் செல்லமுடியும் என்கின்றனர்.

"இரஷ்யா-சீனாக் கூட்டுறவு பிரிய முடியாததல்ல. செஞ்சீனாவுக்கு ஐ. நாடுகள் மன்றத்தில் இடம் தரப்பட்டால், பிறகு சீனா தனக்கெனத் தனித்தியங்கமுடியும்; (இரஷ்யாவின் ஆதிக்கம் இல்லாது) தனக்கெனக் கொள்கைகளை வகுத்துக்கொள்ள முடியும்" என்று டோரண்டோவில் ஒரு பேட்டியில் கூறினார் காலஞ்சென்ற பி. என். இராவ் அவர்கள்.

ஐ. நா.வினால்தான் சீனா தனித்தியங்க முடியும் என்பது அவர் கருத்து.

"45 கோடி மக்களைக் கொண்ட ஒரு பெரும் நாடு—தன் சிந்தனையுள்ள மாவின் தலைமையில் இயங்கும் நாடு. இரஷ்யப் பிணைப்பிலிருந்து விடுபடாமல் போகாது. சின்ன இங்கிலாந்தால் அலைக் கழிக்கப்பட்டதானாலும், இறுதியில் இந்தியா வென்றிடவில்லையோ?" எனத் தம் வாதத்தைச் சொல்வோரும் உளர்.

நிலைமையோ வேறு. பிரித்தன் தனது சில ஆயிரம் வெள்ளைப்படையால் இந்தியாவைச் சூறையாடியது. அதனால் ஆதிக்க வேட்டையை மக்கள் நன்குணர்ந்தனர். பகை என நினைத்துச் சாடினர். சுரண்டிய அளவுக்கு, பிரித்தன் எந்த உதவியும் செய்யவில்லை. எனவே மக்கள் அவற்றைக் கண்கூடாகக் கண்டு கொதித்தெழ முடிந்தது.

இரஷ்யாவோ தனது ஆதிக்கத்தை ஆட்சியிலிருக்கும் சீனர்கள் மீதே மொத்தமாகச் செலுத்துகிறது. சீனர் தாம் ஆள்வதுபோலத் தோன்றினும், அந்தத் திட்டங்கள்- கொள்கைகள் அனைத்தையும் வகுப்போர் இரஷ்யாவினர்தான். இதனால் சீன மக்கள் உணராமலேயே இரஷ்ய ஆதிக்கம் தழைக்க முடிகிறது. யாரேனும் ஒருவன் அதை உணர்ந்து குமுறினால் உடனே அவனைக் கொன்று துவைத்து, அந்த எண்ணம் பரவவிடாமல் தடுக்கிறது இரஷ்யர் ஆதிக்கமுள்ள இரகசிய போலீஸ். இரஷ்யர் தரும் திட்டத்தை மறுத்தால் கொலை மேடையில்தான் ஊஞ்சலாட வேண்டியிருக்கும் என்பதை உணர்ந்த பதவிப் பித்துள்ள சீனத் தலைவர்களும் நாணல் காடாகி விடுகின்றனர். ஒரு சில தலைவர்கள் இரஷ்ய ஆதிக்கத்தை எதிர்த்து உள் கட்சிப் போராட்டம் நடத்தினாலும், பதவிப்பித்துள்ள மற்ற தலைவர்கள் அன்னாரைக் காட்டிக் கொடுத்து விடுகின்றனர். இப்படிப் பலி வாங்குவதைத்தான் ஆண்டுதோறும் "களையெடுப்பு" எனக் குறிக்கின்றனர். இந்த உள் கட்சிப் போராட்டத்தில் தாக்குப்பிடிக்க முடியாமல்தான் மாசேதுங் ஆட்சியை விட்டுக் கட்சி வேலைகளில் இறங்கப் போவதாகவும் கருத இடமுண்டு. மாவின் கை தாழ்ந்து, சூஎன்லாயின் கைகள் உயரும் நேரமிது.

"டிட்டோ உதறித் தள்ளவில்லையா? மா உதறித்தள்ள நாட்கள் எத்துணை ஆகும்? 'சின்ன யூகோவின் தலைவன் சாதித்ததை பெரிய சீனாவின் தலைவன் சாதிக்க முடியாதா?" என்று கேட்பார் ஒரு சிலர். டிட்டோ இணைந்த முறையிலும் பிரிந்த வகையிலும் மாவைவிட வேறுபட்டிருக்கிறார். யூகோவிலும் சீனாவிலும் பொதுவுடைமை எழுந்த வகைகளில் மாற்றம் பல உண்டு.

யூகோவில் பொதுவுடைமை ஆட்சி தோன்றியது முழுக்க முழுக்க இரஷ்ய உதவியால் அன்று. சீனாவோ இரஷ்யாவின் பலவகை உதவியால்தான் புத்தாட்சி பெற்றது. அது தந்த படை உதவியும் பிறவுமே சியாங்கை வீழ்த்தின.

டிட்டோ தொடக்கத்திலேயே இரஷ்யப் படைகள் தன்னாட்டினுள் நுழையாது பார்த்துக்கொண்டான். உதவி செய்யும் போக்கில் தொடக்கத்திலேயே இரஷ்யப் படைகள் வடகிழக்குச் சீனாவில் நிலை நின்றுவிட்டன. புரட்சி முடிந்தும் பலகாலம் அவை போகவில்லை. தனது இரகசியப் போலீசை நிலையாக அங்கு நிலவவிட்ட பின்பே திரும்பின.

யூகோ இரஷ்யாவைக் கடந்து பல ஆயிரம் கற்களில் இருக்கிறது. சீனாவோ இரஷ்ய எல்லைக் கோட்டில் கிடக்கிறது. டிட்டோ எதிர்த்தபோது உடனடியாய் யூகோவில் நுழைந்து தாக்குவதற்கு இரஷ்யாவிற்கு வசதியில்லை. ஹங்கேரியில் கிடைத்தாற்போன்று எந்த துரோகியும் அகப்படவில்லை. சீனா ஏதேனும் மாறுபாட்டைக் காட்டினால் உடனே இரஷ்யப் படைகள் நுழைந்து எதிர்ப்பை நசுக்க முடியும். இரஷ்யாவின் அடுத்த வீடு சீனா. இரஷ்யாவின் காலடியில் கிடக்கும் பணியாள் சீனா.

• குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்
ஏஜ: ஏ. சங்குபிள்ளை, திண்டுக்கல் ரோடு, மதுரை.

யூகோவின் எந்தத் துறைமுகமும் இரஷ்யாவின் ஆதிக்கத்தில் கிடையாது. அதன் வணிகத்தையோ வாழ்க்கைத் தேவைகளின் ஏற்றுமதி இறக்குமதியையோ தடுப்பதற்குக் கூட முடியாது. சீனாவின் முக்கியத் துறைமுகங்களான மஞ்சூரியப் பகுதியைச் சேர்ந்த டைரன், ஆர்தர் ஆகியவை இரஷ்யாவின் நேரடி நிர்வாகத்தில் உள்ளன. சீனக் கிழக்கத்திய இருப்புப்பாதையும் இரஷ்ய நிர்வாகத்திலேயே உள்ளது. மேலாக, வட கொரியாவில் எப்போதும் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் இரஷ்யப் படைகள் சீனாவின் உயிர்நாடிகளை ஒரே நொடியில் தகர்க்கமுடியும்.

எல்லாவற்றிற்கும் மேலாக, இரஷ்யர் யூகோவில் கற்றுக்கொண்ட புதிய பெரிய அனுபவங்கள் பல குறுக்கு வழிகளைக் கற்றுக் கொடுத்து விட்டதால், இனி இரஷ்யர் எப்போதும் தனது அடிமைகளிடம் எச்சரிக்கையாகவே இருப்பர்.

"தோழர் மா சுய சிந்தனையும் தனிக் கொள்கையும் கொண்டவர்; யாராலும் அவரைக் கவிழ்க்கமுடியாது" என்று பேசுவாரும் உள்ளனர்.

"சீனப் பொதுவுடைமையே தனிவகையானது". என்றும் சொல்வர். அணுவுக்கணுவாய் ஆய்ந்து பார்க்கையில், தன் சித்தாந்தங்களைத் தானே டிட்டோ வகுத்துக்கொண்டதுபோல், தோழர் மாவோ தோழர் சூவோ வகுத்துக்கொள்ளவில்லை. எனவே இவ்வழியாகவும் சீனா பிரிய வாய்ப்பில்லை.

தாசானுதாசனாக அடிமை முறிச்சீட்டு எழுதிக் கொடுத்துள்ள மாவின் போக்கை, அவர் எழுதியுள்ள "சீனாவின் வெற்றி" என்ற நூலே எதிரொலிக்கிறது.

இதுகாறும் காட்டியவற்றால் ஓரளவு இருநாட்டின் நிலைகள் உங்கட்குத் தெரிந்திருக்கும். டிட்டோ யாரையும் தன் எல்லைக் கோட்டுக்குள்ளே நுழையவிடாது தொடக்கத்திலேயே எச்சரிக்கையாயிருந்தார். மாவோ எப்படியும் சியாங்கைத் தோற்கடிக்க வேண்டும் என்பதால் இரஷ்யாவின் அடிமையாகிவிட்டார். இருவரும் பொதுவுடைமையை முழுக்க முழுக்க நம்பியோர்தாம். சராசரி மனிதனும் வாழ்வில் சமபங்கு பெற வேண்டும் என்றுதான் போராடினர். ஆனால் டிட்டோவிடம் உள்ள துணிவும் திறனும் மாவுக்கில்லையே! எனவேதான் மா தனது நவசீனத்தைச் சூழ்ந்திருக்கும் அவகேடுகளை வெல்வது கடினமாகிறது. தோழமை உருவில் வந்த அடிமைத் தளையை உடைப்பது கடினமாகிறது. **சரித்திரக் கொப்பில் காய்த்த இந்தச் சம்பவக் கொத்துக்கள் தரும் பாடம் இதுதான்: செஞ்சீனம் விடுதலை பெறுவது முயலுக்குக் கொம்பு முளைக்கும் கதையே!** ★

தோழர்கள் பலரின் வேண்டுகோளுக்கிணங்க, தென்றல் 1958 பொங்கல் மலரில் வெளியான **அண்ணா** அவர்களின் படமும், 1959 பொங்கல் மலரில் வெளியான **எம். ஜி. ஆர்., எஸ். எஸ். ஆர், கண்ணதாசன்** ஆகியோர் இணைந்த படமும் தனித்தனியே அச்சிடப்பட்டுள்ளன. வேண்டும் தோழர்கள் அஞ்சல் செலவு உள்படக் கீழ்க்கண்டபடி அஞ்சல் தலைகள் அனுப்பிப் பெற்றுக்கொள்க:

அண்ணா படம் ... **31 புதிய காசுகள்**

**எம். ஜி. ஆர்.
எஸ். எஸ். ஆர்.
கண்ணதாசன்** } **31 புதிய காசுகள்**

விற்பனையாளர்கள், தேவையானவற்றிற்குக் கழிவு 6 காசுகள் நீக்கி பிரதி ஒன்றுக்கு 25 காசு விதம் முன்பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்க.

பொறுப்பாளர்,
"தென்றல்"

வினா — விடை

கூடலரசன் பதிலளிக்கிறார்

மு. இளங்கோ பி. ஏ.,
புதுக்கோட்டை.

சென்னைக்கு வரும்போது டாங்கே தன் விவகாரம்பற்றி கடற்கரையில் கூட்டம் போட்டு விளக்குவாரா ?

நல்ல கேள்வி நண்பரே ! நானும் பலமுறை கேட்டுவிட்டேன் டாங்கேயின் பதில் எங்கே என்றும், ஏன் ஊமைத்தனம் என்றும் ! இப்போதாவது ஜன்சக்திக்காரர்களுக்குத் தெளிவு பிறக்குமா ?

தெலிங்கான 'புரட்சி வீரர்' தோழர் சுந்தரய்யாவின் ராஜிநாமா என்னவாயிற்று ?

இந்தச் செய்தியை 'ஜனசக்தி' மறுத்தது மறுக்க வேண்டிய 'மாவீரன்' மாஸ்கோவுக்குப் போய் விட்டார் ! திரும்பி வரட்டும். சேதியைக் கேட்போம் !

தண்டிக்கப்பட்ட கம்யூனிஸ்ட் தலைவர் சுப்பையா இப்போது எங்கே இருக்கிறார் ?

ரஷ்ய நாட்டு மருத்துவ விடுதியில் தான் ! தமிழ்நாட்டிலே வைத்திய நிபுணர்களா இருக்கிறார்கள் ? சுந்தரய்யாவுக்குத் துணை வேண்டாமா ? டாங்கே போனால் மனைவி, மகள், மருமகன் எல்லோரும் போகவில்லையா ? மாஸ்கோ தெய்வங்களின் இலவச வைத்திய உதவியை—குறிப்பாக இந்திய நாட்டு அடிமைக் கம்யூனிஸ்ட்களுக்கு அளிக்கப்படும் அற்புத உதவியைப்பற்றி ஏடு கொள்ளாத அளவுக்கு எழுதி அனுப்புகிறாரே — நீங்கள் காணவில்லையா ?

★

நாகூர்கனி, பேட்டை,
நெல்லை.

முஸ்லீம்கள் தி. மு. க.வில் சேருவது இனத்துரோகம் என்று கம்யூனிஸ்ட்கள் சொல்வது ஏன் ?

கம்யூனிஸ்ட் கட்சியை எட்டி உதைத்துவிட்டுப் போகிறார்களே என்ற எரிச்சல்தான் ! துதி பாடிப் பிழைத்துக்கொள்வதும், துரோகம் செய்து பழிவாங்குவதும் இந்தியக் கம்யூனிஸ்ட்களின் கடந்த காலக் கதைகள் ! பீட்டர் மொரைஸ் போன்ற ஒரு கிருத்துவர், கம்யூனிஸ்டானால் கத்தோலிக்க மதத்திற்குக் கட்டியங் கூறித் திரிவார்கள்; தாமே காரல் மார்க்சின் சீடர்கள் என்றும் பேசிக்கொள்வார்கள் ! முஸ்லீம்கள் மதத்தை மறந்து திராவிட இனத்தவராகக் கழகத்தில் சேருவதால் கம்யூனிஸ்ட்கள் தூற்றுகிறார்கள் ! மதத்தைப் போற்றித் திரியும் 'மட்ட ரகங்களை' நீங்கள் மறந்துவிடுங்கள்.

★

மணிமாறன், திருச்சி.

ரஷ்ய எழுத்தாளர் 'பாஸ்டர்நாக்' உயிருடன் இருக்கிறாரா ?

அவரை இன்னும் கொன்றுவிடவில்லை ! எந்த நிமிடத்திலும் அவரும் ஒரு 'இம்ரே நாகி' ஆக்கப்படுவார். இது, அவரே, "நான் கூண்டிலடைபட்ட ஒரு மிருகமாக இருக்கிறேன்" என்று சொல்லியுள்ள வாக்கியத்திலிருந்து புலனாகிறது.

நம்பூதிரிபாத் மாஸ்கோவிலிருந்து என்ன கொண்டு வந்துள்ளார் ?

நேரு சர்க்காருக்குச் சிலயோசனைகள்; இந்தியக் கம்யூனிஸ்ட்களுக்குச் சில கட்டளைகள் ! ரஷ்யாவின் ஏழாண்டுத் திட்டத்தைப் புகழ்ந்து பேச அந்தக் கட்டளைகள் !

★

இரேவதி, சூலூர், கோவை.

நகராட்சி மன்றத் தேர்தலில் கம்யூனிஸ்ட்கள் ஜனநாயகக் காங்கிரசை ஆதரிப்பதின் நோக்கம் என்ன ?

இத்தகைய கட்சிக் கலப்பு மணங்களுக்குக் கம்யூனிஸ்ட்கள் எப்போதும் தயாராக இருப்பார்கள் ! அடுத்துக் கெடுக்கின்ற காலம் வரும்வரைக்கும் திகைக்கும் வகையில் 'பதி பக்தி' காட்டுவார்கள் ! திடீரென்று ஒருநாள் 'விவாகரத்து' விவகாரம் வரும் ! சென்றபொதுத் தேர்தலில் முத்துராமலிங்கரின் தயவுக்காகத்தான் கம்யூனிஸ்ட்கள் காங்கிரஸ் சீர்திருத்தக் கமிட்டிக்குக் கையாளாக இருந்தார்கள். முதலாளி எச். டி. ராஜாவுக்காகப் பாடுபட்டார்கள் ! இப்போது கோவையிலும் வேறு பல இடங்களிலும் இந்த 'இரட்டை நாக்குப் படைத்தவர்கள்' இரண்டறக் கலந்துவிட்டார்கள், தேர்தல் வேட்டைக்காக !

★

கம்யூனிஸ்ட் பாண்டியன்,
சென்னை-17.

டாங்கே ரூ. 5000 பெறுகிறார் என்பதை ஜனசக்தியில் மாஜினி ஆணித்தரமாக மறுத்த பிறகும் மீண்டும் இப்பிரச்னையை கிளப்புவது குருட்டுத்தனமான கம்யூனிச எதிர்ப்பா அல்லது பேசுவதற்கு சரக்கில்லாத காரணமா—விளக்கம் தேவை ?

மாஜினி 'தென்றலின்' மூன்றுவது கட்டுரைக்கு முழுவதுமாக பதில் சொல்லி ஆணித்தரமாக மறுத்திருந்தால் நான்காவது கட்டுரை வெளிவந்திருக்காது. மீண்டும் மாஜினியின் கருத்துரைகளை மறுக்காமலிருந்தால் 'தென்றல்' தோற்றுவிட்டதாகப் பேசியிருக்கும் உங்கள் உரைகல் ! உண்மையைக் கூறுங்கள் என்று கேட்பது கம்யூனிச எதிர்ப்பல்ல. இதைக் குருட்டுத்தனமென்று சொல்லிவிடுவதினாலே, சரக்கில்லை என்றுசபித்து விடுவதினாலே, அகில இந்தியாவிலும் இருக்கின்ற கம்யூனிஸ்ட்கள் டாங்கேயை காப்பாற்றிட முடியாது. மாறாக, அவரைக் காட்டிக் கொடுக்கிறீர்கள் என்றே நான் கருதுகிறேன்.

அழகைசஞ்சீவி, நீலகிரி.

"டாங்கே எங்கே ?" என்று கேட்க இவர்கள் யார் ? என்று கூறும் கம்யூனிஸ்ட் தோழருக்கு என்ன பதிலுரைப்பீர் ?

கம்யூனிஸ்ட் கட்சியின் பெருந்தலைவர்மீது களங்கம் படிந்துவிடக் கூடாதென்ற நல்ல எண்ணத்தில் தான் கேட்க நேரிட்டது. மறுத்தவர்கள் எல்லோரும் ஒரே அணியில் நின்றிருந்தால் மகிழ்ந்திருப்போம். ஆனால் ஆளுக்கொரு பதிலைச் சொன்னார்கள் ! கோவை நகரம் காந்திபுரத்துக் கம்யூனிஸ்ட் அனுதாபி ம. ந. ராமசாமி என்பவர் "டாங்கே உலகத் தொழிற்சங்கத்திலிருந்து ரூ. 5000 சம்பளமாக மாதா மாதம் பெறுகிறார். சரி, பெறட்டும். அதனால் என்ன ? அதில் கட்சிக்குரிய பங்கை அவர் செலுத்தவில்லை. அவ்வளவுதானே ! கம்யூனிஸ்ட் கட்சிக்குத் தனிப்பட்ட நபரின்மீது எவ்வித வாஞ்சையும் இல்லை. இவர் (டாங்கே) இல்லாவிட்டால் இன்னொருவர்...கட்சிக்கு மாசு உண்டாக்கும் தலைவர்களை கம்யூனிஸ்ட் கட்சி விட்டுவைத்ததில்லை..." என்று எனக்கு 25-12-58ல் எழுதிய கடிதத்தில் சமாதானம் கூறுகிறார். சாக்கடை மொழிகளையும் வாரியிறைத்திருக்கிறார் ! தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்ட்கள் அத்தனை பேரும் இந்தப் பிரச்னையில் ஒன்றுகூடி நன்றாகக் கலந்து பேசி முடிவு எடுத்துக் கொண்டு, 'டாங்கே எங்கே' எனக் கேட்காதீர் என்று எம்போன்றார்க்குச் சொல்லவேண்டும் ! ஒரே மாதிரியான பதில் தேவை. தமிழகத்துத் தொழிற்சங்க காங்கிரசின் தலைவர் கல்யாணசுந்தரம் என்ன சொல்கிறார் ? உங்களுடைய நண்பரிடத்திலே கேட்டுப் பாருங்கள் !

★

கம்யூனிஸ்ட் பழனிச்சாமி,
சென்னை-6.

'மாஜினி'யின் மார்க்சிசத்திற்கும் உங்கள் மார்க்சிசத்திற்கும் உள்ள வித்தியாசம் என்ன ?

ஜனசக்தியின் மாஜினியைத்தானே குறிப்பிடுகிறீர்கள் ? அவருடைய மார்க்சிசத்தில் ஒவ்வொரு கம்யூனிஸ்டும் தூத்துக்குடிச் செயலாளர் பீட்டர் மொரைசைப்போல கிருத்துவ மதபக்தர்களாக, பாதிரிகளின் பாதந்தாங்கிகளாக இருக்க வேண்டும். நான் சார்ந்த திராவிட முன்னேற்றக் கழகம் விரும்பும் மார்க்சிசம் மதமாய்கையிலிருந்து விடுபட்ட மக்கள் புதியதோர் சுயமரியாதைச் சமுதாயமாக இருப்பதாகும். கம்யூனிச வளர்ச்சி உலகில் 3-ல் ஒரு பகுதியென்ற சரித்திரம் படித்திருக்கிறீர்கள் நீங்கள். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மதவாதிகளைப்பற்றிப் பேசினால், ஆலயங்களில் குவிந்து கிடக்கும் செல்வத்தைச் செலவழிக்கும் வழி சொன்னால், பாமரமக்கள் தன்னை வெறுத்து விடுகிறார்கள் என்று வெகுஜனக் கண்ணோட்டம் போட்டு அஞ்சுகிறது. அவர்களுக்குச் சொல்லுங்கள்: இந்தக் காரியத்தை கட்சி தன் செயலிலே ஒன்றாக மதிக்காத வரையில், நீங்கள் எல்லாம் உண்மையில் கம்யூனிஸ்ட்களல்ல. அந்த 'லேபிள்' போட்ட 'இரவல்'கள் !

கூடலரசன் நிகழ்ச்சிகள்

★

26—1—59-ல் மேலூர் தி. மு. க. பொதுக்கூட்டத்திலும்,
22—2—59-ல் திருவைகுண்ட தி. மு. க. பொதுக்கூட்டத்திலும்,
1—3—59-ல் மதுரை பனகல் படிப்பகப் பொதுக்கூட்டத்திலும் தோழர் கூடலரசன் கலந்து கொண்டு கழக இலட்சியம் குறித்தும், காங்கிரசார்-பொதுவுடைமையர் போக்கை விமர்சித்தும் விரிவுரைகளாற்றினர்.

★

மார்க்கண்டன், திருப்பத்தூர்.

திருப்பத்தூர் வயிரவன் கோவிலில் குன்றக்குடியார் நடத்திய திருமுறை மாநாட்டில் தோழர் ஜீவானந்தம் நாவுக்கரசர் கண்ட பொதுவுடமை பற்றிப் பேசி, சிவக்கோலம் பூண்டது ஏன் ?

அந்த மாநாட்டில் கம்யூனிஸ்ட் ஜீவானந்தம் கலந்துகொண்டதே தவறு ! நாவுக்கரசர் சாம்பலைத்தடவி மன்னனின் வயிற்றுவலி போக்கியவர்; அவர் பொதுவுடைமையின் கர்த்தா என்றெல்லாம் பேசியது காரல் மார்க்சுக்குத் திங்கிழைக்கும் துரோகம் ! ஜீவானந்தம் மட்டும் எதை வேண்டுமானாலும் பேசலாம் என்பது தமிழ்நாட்டுக் கமிட்டியின் முடிவாகும் ! ஐவருக்கும் பத்தினியாக இருந்த திரௌபதையை, பொதுவுடைமையின் சின்னம் என்றுகூட ஜீவானந்தம் போன்ற தீவிரக் கம்யூனிஸ்ட்கள் சொல்லலாம். மாஸ்கோவிலிருந்து மதுரை வந்து மீனாட்சியம்மன் கோவில் சிலைகளைப்பார்த்து மகிழ்ந்து சுவர்க்கம் கிடைத்தால் மகிழ்வோம் என்று பேசிய தூதுக்குழுவினர்கூடப் பாராட்டுவார்கள் ! ஜீவானந்தங்கள் கம்பராமாயண கதா காலட்சேபத்துடன் நிறுத்தியிருந்தால் மன்னித்துவிடலாம். ஆனால் கம்யூனிஸ்ட் பக்தர்களைப் பராமரிக்கும் பாரம்பரியம் வைத்துக்கொண்டுள்ள இந்தப் புதிய பாகவதர்கள் தான் நாவுக்கரசர்களையெல்லாம் பொதுவுடமைவாதிகளாக்கி தமிழ் நாட்டுக் கம்யூனிஸ்ட்களை நன்றாக ஏமாற்றித் திரிகிறார்கள் !

விருத்தப் போட்டி

முகமலரைத் தேடிவந்து நிற்ப வர்க்குன்
முடிமலரைக் காட்டுவது சரியா பெண்ணே ?
தொகைதொகையாய்க் கொட்டிவிட்டுப் பரத்தை வீட்டில்
தொட்டணைத்துக் கூடுகின்ற கயவன் அல்ல!
பகைவளர்க்கும் சாதிவெறி கொண்டே நாட்டில்
படுகுழியைத் தோண்டுகின்ற பதரு(ம்) அல்ல!
புகழ்வளர்த்த தமிழ்மரபில் தோன்றி இன்று
பெண்ணுயர்வு பேசுகின்ற கழகக் காளை!
—சா. சதாசிவம், உப்புப்பாளையம்.

★

முகமலரைத் தேடிவந்து நிற்ப வர்க்குன்
முடிமலரைக் காட்டுவது சரியா பெண்ணே ?
அகமகிழ்ந்து அந்நாளில் நீயும் நானும்
ஆட்டங்கள் போட்டதையும் மறந்தா போனாய் ?
சுகப்படவே பொருளீட்ட வெளியூர் சென்றேன்
தோகைமயில் எனநீயும் வளர்ந்தே விட்டாய்!
அகப்பட்டாய் இன்றென்முன் அத்தான் தான்நான்
ஆருயிரே திரும்படிநீ ஏனோ வெட்கம் ?
—இராசேந்திரன், வில்லியனூர்.

★

சுகமனைத்தும் ஒருருவாய்த் திரண்டே வந்த
சுந்தரியே! வெண்மதியே! தென்றற் காற்றே
அகமதிலே காதலெனும் போதை ஏற்றி
ஆட்டிவைக்கும் மாமதுவே! வாழ்வில் இன்பச்
சிகரமென விளங்கிவரும் தேனே! எந்தன்
சிந்தையெலாம் மணம்பரப்பும் மலரே ஆசை
முகமலரைத் தேடிவந்து நிற்ப வர்க்குன்
முடிமலரைக் காட்டுவது சரியா பெண்ணே ?
—கோ புகழேந்தி, புதுவை.

★

பகலெல்லாம் காத்திருந்து மாலைப் போதில்
பசியுள்ளம் அன்புடனே பிடித்துத் தள்ள
முகமலரைத் தேடிவந்து நிற்ப வர்க்குன்
முடிமலரைக் காட்டுவது சரியா பெண்ணே ?
நகத்துடனே சதையொட்டி இருத்தல் போல
நனவுலகம் மறந்திருத்தல் வேண்டும் கண்ணே!
அகமிருக்கும் நாணத்தை அனுப்பி விட்டு
அதிவிரைவில் வந்திடுவாய்; இன்பம் காண்போம்!
—இரா. குமரவேல், சென்னை-14.

★

புகைமேகக் குளிர்வானில் விழிகள் மேயும்
பொன்மலரின் புதுமணத்தை நாசி கொஞ்சும்
புகழ்மலரும் நறுந்தமிழில் செவிக ளாரும்
புத்தமுத முக்கனியில் நாவும் தோயும்
திகழ்நறுந்தண் சந்தனத்தை மேனி தேடும்
தொகையாக இவையிவற்றில் இன்ப மென்றே
முகமலரைத் தேடிவந்து நிற்ப வர்க்குன்
முடிமலரைக் காட்டுவது சரியா பெண்ணே ?
—வல்லம்-மை. மு. மன்னன்.

★

முகமலரைத் தேடிவந்து நிற்ப வர்க்குன்
முடிமலரைக் காட்டுவது சரியா பெண்ணே ?
அகமலர, விழிமலர, ஒவ்வோர் நாளும்
அடிக்கடியும் நம்வீட்டுப் பக்க மாக
முகமலரைக் காட்டுவாயென் றெண்ணி வந்து
முறிந்தமனங் கொண் டேகிப்,போகின் றாரே!
அகமிரங்கு எனத்தூது பேசுந் தோழி
அவசரமாய்த் தானெனக்குத் தேவை! தேவை!!
—புலவர் தொல்காப்பியன், அகரப்பேட்டை.

★

தமிழ்காக்கத் தவநிலையில் வாழும் தோழன்
திகழ்வீரச் சமர்புரிய ஏகும் முன்னே
தென்றல்சுக விரலாலே திலகம் பெற்றுத்
தேரேறித் தீயோரை அழிக்க வெண்ணி
முகமலரைத் தேடிவந்து நிற்ப வர்க்குன்
முடிமலரைக் காட்டுவது சரியா பெண்ணே ?
வேல்கொடுத்து விலாவொடிக்க விடைய ளித்து
வீரமொடு வழியனுப்பு காதற் கண்ணே!
—பி. சி. அரசு, ஊசிமலை.

★

அகம்விட்டே அயல்நாடு சென்றி ருக்கும்
அன்புருவாம் ஆளனவன் வருநா ளேங்கிப்
புகைபடிந்த ஓவியமாய் ஆனாய் இன்றோ
போர்வென்றார் நாட்கழித்து வந்தால் என்ன ?
முகைவிரிய மலர்மணக்கத் தென்றல் தூண்ட
முழுதுயிரும் நீயன்றி நில்லா தாக
முகமலரைத் தேடிவந்து நிற்ப வர்க்குன்
முடிமலரைக் காட்டுவது சரியா பெண்ணே ?
—மா. பொ. இராமச்சந்திரன், ஏலம்பாக்கம்.

★

அகமதிலே தேங்கிநிற்கும் ஆசை யெல்லாம்
அடங்குவகை உரையாடி மகிழ வெண்ணி
முகமலரைத் தேடிவந்து நிற்ப வர்க்குன்
முடிமலரைக் காட்டுவது சரியா பெண்ணே ?
புகமுடியா துன்வீட்டில் நானும் உன்போல்
பொருளுடையன் ஆகாமல் என்று தானே
மிகபொருளைத் தேடிவரச் சென்றேன் குற்றம்
மெத்தஇதில் என்னவுண்டு பேசு கண்ணே
—ந. ஜாபர், சித்தையன்கோட்டை.

★

பகைவரது மெய்யெல்லாம் ரத்தம் சொட்டப்
பார்த்தவர்கள் மெய்யெல்லாம் வியர்வை சொட்டப்
பகல்முழுதும் போர்க்களத்தில் பொருதி வெற்றிப்
பண்ணோடு திரும்பிவரும் போதே தம்மின்
அகமலர அதிலூறும் காதல் வெள்ளம்
அணைபுரளக் கரைதவழ ஆசை யோடு
முகமலரைத் தேடிவந்து நிற்ப வர்க்குன்
முடிமலரைக் காட்டுவது சரியா பெண்ணே!
—இலக்குமிமணாளன், நாமக்கல்.

★

அகமோடு புறமோடு அழியாச் செல்வம்
அனைத்தோடும் புகழோங்கும் தமிழை வீழ்த்திச்
சுகமோடு வாழுதற்குத் திட்டம் போடும்
சுடுகாட்டு இந்தியினைச் சூறை யாடிப்
பகைவர்முன் தமிழ்வீரம் காட்டு தற்குப்
படைநோக்கிப் புறப்பட்டுச் செல்லும் வேளை
முகமலரைத் தேடிவந்து நிற்ப வர்க்குன்
முடிமலரைக் காட்டுவது சரியா பெண்ணே.
—எழிலூரான், சுந்தராபுரம்

★

மகிழம்பூ முல்லைப்பூ தாம ரைப்பூ
மல்லிகைப்பூ அத்தனையும் ஆகா தென்று
புகுந்துடலை வாட்டுகிற காதல் நோயைப்
போக்குதற்கு ஏற்றநல்ல மருந்தாம் உன்றன்
முகமலரைத் தேடிவந்து நிற்ப வர்க்குன்
முடிமலரைக் காட்டுவது சரியா பெண்ணே ?
வகையற்று வந்தவரை உள்ளந் தேற்றி
வாழ்விப்பாய்; நல்லின்பம் சேர்ப்பாய் கண்ணே!
—கு. கார்த்திகாதேவி, கமுதி.

★

பகற்பொழுது நீங்கியதும் ஆசை கொண்டு
பறந்துனது காதலுக்கு வருவதுண்டு
பகுத்தறிவுப் பூங்காவின் மலரே இன்று
பறித்துமணம் சூடும்நாள் சொல்வ தென்று
முகமலரைத் தேடிவந்து நிற்ப வர்க்குன்
முடிமலரைக் காட்டுவது சரியா பெண்ணே!
திகட்டாத தேமதுரத் தமிழின் பண்ணே!
திரும்பாத ஊடலென்ன ? குறும்போ கண்ணே!
—வெ வேங்கடசாமி, பாலையம்பட்டி.

★

பகையரசர் தலையறுத்துப் போரில் வென்று
பவழவிதழ்க் குறுநகையா ளுன்றன் அன்பு
முகமலரைத் தேடிவந்து நிற்ப வர்க்குன்
முடிமலரைக் காட்டுவது சரியா ? பெண்ணே!
பகைவரிடை யுனைமறந்தார் தமிழைக் காக்க
பண்புநிறை தமிழ்நாட்டின் பெருமை சேர்க்க
நகையொளிருந் திருமுகத்தைக் கொஞ்சங் காட்டு
நற்கணவன் மேற்கொண்ட கோபம் மாற்று.
—தமிழுடியான், புதுக்கோட்டை.

★

இகமதிலே பிறர்மதிக்க வாழ வேண்டின்
எம்முன்னோர் வைத்தபொருள் காத்தே நாளும்
தகுமுறையில் மனைகாக்க வணிகம் செய்து
சால்புடனே பொருளீட்டி அணிசெய் முல்லை
நகுமுகத்தைக் காட்டுகின்ற கார்கா லத்தில்
நான்வரவே விடைதருக என்றே பூக்கும்
முகமலரைத் தேடிவந்து நிற்ப வர்க்குன்
முடிமலரைக் காட்டுவது சரியா பெண்ணே!
—வீர. நா. தேசிகன், காளையார்கோவில்.

★

அகமலர்ந்து உன்னிடத்தில் அன்பு வார்த்தை
ஆரமுதைப் பருகுதற்கு ஏங்கி நிற்கும்
தகவுடைய ஆண்மகற்குப் பெண்ணே! உள்ளத்
தாழ்ப்பாளைத் திறந்துவிடு; விளக்கை ஏற்று;
முகமலரில் பட்டுமந்த ஒளிதான்; உன்றன்
முழுஉருவுந் தெரியட்டும்; நீதான் வீணே
முகமலரைத் தேடிவந்து நிற்ப வர்க்குன்
முடிமலரைக் காட்டுவது சரியா பெண்ணே!
—ப. வே. திருமாவளவன், கீரனூர்.

★

பகலென்றும் இரவென்றும் பாரா வண்ணம்
பக்குவமாய் பரிமாறும் பருவ இன்பம்
அகமெங்கும் அலைபாய்ந்து ஆர்க்குங் காட்சி
அப்படியே அன்றுடம் அம்மப்போ மென்று
செகம்வெல்லும் சேல்விழிகள் செப்பக் கேட்டு
சேரனவன் சிலையெனவே வளையத் தாழ்ந்து
முகமலரைத் தேடிவந்து நிற்ப வர்க்குன்
முடிமலரைக் காட்டுவது சரியா பெண்ணே!
—தி. எதிராசன், தருமபுரம்.

★

அகலாது மொய்க்கின்ற வண்டி ரண்டும்
அருந்தாத நறுந்தேனைச் சுவைக்க வென்றே
முகமலரைத் தேடிவந்து நிற்ப வர்க்குன்
முடிமலரைக் காட்டுவது சரியா பெண்ணே ?
திகட்டாத தமிழ்த்தேனைச் சுவைப்பேன்; இந்தச்
செழுமலர்த்தேன் சுவைத்ததில்லை; வண்டு மில்லை;
நகச்சிவப்பு நிறங்காட்டும் இதழைக் கொண்டே
நறுமுல்லைச் சரங்கோத்து முறுவல் காட்டு!
—அ. இரத்தினசாமி, கோவிலூர்.

★

"நகரடுத்து நம்பகைவர் வந்த தாலே
நலமுடைய தாயகத்தைக் காப்ப தற்கே
மிகவிரைவில் பகையொடுக்க மின்ன லென்று
விழிக்கணையின் துணைவேண்டி வெல்லற் கிங்கே
அகமுடையாள் ஆணைதனைப் பெற்றுச் செல்ல
அழகரசி! உன்னிடத்து விரைந்தே வந்தேன்;
முகமலரைத் தேடிவந்து நிற்ப வர்க்குன்
முடிமலரைக் காட்டுவது சரியா பெண்ணே ?
—ச. அமுதன், விருதுநகர்.

★

பகலெல்லாம் தொழிலோடு தொல்லைப் பட்டே
பாவைநீ தந்திட்ட இன்பம் எண்ணி
அகமெல்லாம் சிலிர்த்துள்ள ஆர்வம் மீறி
ஆசையுடன் உனைநாடி வந்தேன் இன்பச்
சுகமலரச் செய்திடும்நற் செம்பொற் பாவாய்
சோதனையேன் சொல்லாயோ ? சுவைக்கும் உந்தன்
முகமலரைத் தேடிவந்து நிற்ப வர்க்குன்
முடிமலரைக் காட்டுவது சரியா பெண்ணே ?
—தெரசா, பம்பாய்.

★

முகிற்கூட்டைக் கிழித்திட்ட மின்ன லென்றே
முன்சென்று வென்றிட்ட பெருமை கூறிப்
பகைகொன்ற புகழுக்குப் பரிசா யுந்தன்
பனிபடர்ந்த இதழ்சுவைக்க மனதி லெண்ணி
முகமலரைத் தேடிவந்து நிற்ப வர்க்குன்
முடிமலரைக் காட்டுவது சரியா பெண்ணே ?
அகம்நிறைய அன்பிருந்தும் ஊடல் காட்டி
அன்பனைநீ வாட்டுவது நெறியா கண்ணே ?
—எஸ். ரெங்கசாமி, பாளையம்பட்டி.

★

முகமலரைத் தேடிவந்து நிற்ப வர்க்குன்
முடிமலரைக் காட்டுவது சரியா பெண்ணே ?
அகமலர்ந்து வாய் திறந்து அத்தான் என்றால்
அழகென்ன குறைந்திடுமோ அன்பே என்னை
தகிக்குதடி காதல்த் தணலாய்; மெய்யாய்
தழுவியதைத் தனித்திடுவாய் தமிழப் பெண்ணே!
முகில்நீக்கி வெளித்தோன்றும் முழுமா மதியே
முத்தமிழே எனைஏற்று இன்பம் ஈவாய்.
—சி. கோதண்டராமன், காட்டுப்பாடி.

★

முகமலரைத் தேடிவந்து நிற்ப வர்க்குன்
முடிமலரைக் காட்டுவது சரியா பெண்ணே ?
அகமுடையார் இவ்வாறு கேட்டார்; ஆயின்
ஆவலின்றி அங்ஙனம்நான் செய்தே னில்லை.
முகமென்றும் பார்த்தமுகம், புதிதாய் இன்று
முடித்தசிகை அலங்காரம் கண்ட தில்லை;
மிகஎழிலாய் முடியழகு அமைந்த தாலே
முதல்கடனாய் அவர்முன்னே காட்டி நின்றேன்.
—இராமமூர்த்தி, திருச்சி.

★

புகழ்மதுரைப் பொருட்காட்சி சென்றேன்; அங்கு
போட்டிருந்தார் சித்திரமாய் அழகுப் பெண்ணாள்
முகம்திருப்பி குழல்அவிழ்த்து நிற்பாள் போலே;
முன்னிருந்த ஆட்களையே விலக்கி வந்து
முகமலரைத் தேடிவந்து நிற்ப வர்க்குன்
முடிமலரைக் காட்டுவது சரியா பெண்ணே ?
அகமகிழ முகம்திருப்பு என்றே கூறி
ஆடிநின்றான் ஓர்கிறுக்கன் சிரித்தார் நின்றோர்.
—சி. தனலன், தச்சம்பத்து.

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணாசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு.